Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2021 - 2023
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023**
Published on 17/18 th of Every Month

## எங்களது இதர வெளியீடுகள்



சர்வதேச தரத்தில், தலை சிறந்த பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்

## திருமறை தியானம்

நம்பிக்கை தொலைக்காட்சியில்
வெள்ளி காலை 7:30 - 8.00 மணி
தமிழன் தொலைக்காட்சியில்
சனி காலை 7.00 - 7.30 மணி

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண் 27, காங்கேயம் 638–701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.





Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மலர் - 34 இதழ் - 10 அக்டோபர் - 2021

தனிப்பிரதி ரூ.10/-

## 17.10.2021 23 -ம் வேதாகம கருத்தரங்கின் போது ...




ஆசானின் அறிவுரையிலே ...

| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| புதிய ஏற்பாட்டு ... | 11 |
| பெண்கள் பகுதி | 14 |
| வாலிபர் பகுதி | 18 |
| சிறுவர் பகுதி | 23 |
| நவீன விக்கிரகாராதனை | 25 |
| எனப்பட வெட்கப்படவி ... | 28 |
| நாம் தேவனால் பிறந்த ... | 31 |

- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு தெரியப்படுத்தவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.



12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும்.
தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.




## World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Tamilan TV
Every Saturday 7:00 - 7:30 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7:30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026



# THIRUMARAI AASAAN


**S. Rajanayagam**

**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385


**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 34 October- 2021 Issue - 10**


ஆசிரியர் உரை

## எதுவரைக்கும் கர்த்தாவே!

**நா**ம் நமது கரங்களில் கொண்டிருக்கும் தமிழ் வேதாகமத்தில் **எது வரைக்கும் கர்த்தாவே** என்னும் சொற்றொடர் கிட்டத்தட்ட ஓர் எட்டு இடங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சொற்றொடரை வெளிப்படுத்திய தேவ மனிதர்கள் இதை ஒரு விண்ணப்பமாக, மன்றாட்டாக ஏறெடுக்கப் பயன்படுத்தியுள்ளார்கள். இவர்கள் இப்படியாக ஏறெடுத்த இச்சொற்றொடரிலுள்ள வார்த்தைகளின் உள்ளார்ந்த பொருளை நாம் உற்றுக் கவனித்தால், அவர்கள் அச்சுழலில் எப்படிப்பட்ட மனநிலையில் இருந்துள்ளார்கள் என்பதை நாடிபிடித்துக் காட்டுகிறது. சொல்லப்போனால், அவ்வார்த்தைகள் அவர்களுடைய உள்ளக் குமுறல்களின் வெடிச் சத்தங்களாகவே சிதறி வந்துள்ளது. இன்னும் சொல்வதென்றால், அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் வாழ்வின் ஏதோ ஒரு கட்டத்தில் கடினமான, பாரமான, தங்களால் புரிந்து கொள்ளமுடியாத மன நிலையில் இருந்துள்ளார்கள் என்பதைத் தெரிவிக்கிறது. அதுமாத்திர மல்ல, எதிரான சூழ்நிலைகள் **எப்பொழுது தான் முடியுமோ** என்ற அவர்களின் எதிர்பார்ப்பையும், ஏக்கத்தையும் இது எடுத்துச் சொல்கிறது.

இத்தேவ மனிதர்களின் மனக்குமுறல், இன்றைய காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் அநேகராகிய நம் உள்ளக் கிடக்கைகளை அப்படியே வெளிப்படுத்துகிறதாகவே உள்ளது. எப்படியெனில், சற்றேறக்குறைய கடந்த இரண்டு ஆண்டுகளாக கொரோனா பெருந்தொற்றால் ஒட்டு மொத்த உலகமும் தன் பரபரப்பான செயல்பாடுகளுக்குத் தானாக முன் வந்து கட்டாய ஓய்வு கொடுத்து, தன் செயல்பாடுகளைக் கட்டுக்குள் கொண்டுவந்து முடக்கி வைத்துள்ளது. இதனிமித்தம், அனைத்து மானிடமும்

ஏதாவது ஒரு வகையான பாதிப்பை சந்திக்க நேர்ந்துவிட்டது. ஒரு வேளை, பாதிப்பின் அளவும், தன்மையும் ஒருவருக்கொருவர் வேறு படலாமே தவிர பாதிப்பே இல்லையென்று யாராலும் சொல்லிவிட முடியாது. இப்படி அகிலத்தையும் ஏகமாய் ஆட்டிப்படைத்த இக்கொடுந்தொற்றுச் சூழல் கிறிஸ்தவ சமுதாயத்தையும், மெய்க் கிறிஸ்தவத்தையும் விட்டு வைக்கவில்லை. கடந்த ஓர் நூற்றா ண்டில் விதிவிலக்கிற்கே விலக்கு கொடுத்த ஒரே நிகழ்வு இதுதான்.

நெருக்கடியான நேரங்களிலெல்லாம் **வானம் பார்த்துப்** பழகிவிட்ட நாம் **எதுவரைக்கும் கர்த்தாவே!** என்று முறையிட்ட தேவ மனிதர்களைப் போல் நம் சரீர வாழ்விலும், பக்தி வாழ்விலும் குரல் எழுப்புகிறவர்களாக உள்ளோம். ஆம், இழந்த வேலை எனக்கு எப்போது கிடைக்கும். எப்பொழுதிருந்து முழுவருமானம் கைக்கு வரும், எங்களைச் சீரழிக்கும் கடன் தொல்லையிலிருந்து விடுதலை எப்பொழுது கிடைக்கும், பாதிக்கப்பட்ட என் சுகம் எப்பொழுது திரும்பவும் முழுமையாக வரும், எங்கள் குடும்பத்திற்கு ஏற்பட்ட உயிரிழப்பிலிருந்து நானும், என் குடும்பமும் எப்பொழுது மீண்டு இயல்பு நிலைக்கு வருவோம், எதுவரைக்கும் கர்த்தாவே இந்த நிலையே தொடரும் என்று அங்கலாய்க்கிறவர்களாகவே உள்ளோம்.

ஆன்ம வாழ்வும் இதே ரீதியில் தான் உள்ளது. எப்பொழுது ஒட்டுமொத்த சபையாகக் கூடி தேவனை ஆராதிக்க முடியும்? எப்பொழுது சபை விசுவாசிகளோடு ஐக்கியப் பந்தியில் பங்குபெறப் போகிறோம்? நின்று போன வேத பாட வகுப்புகள் எப்பொழுது ஆரம்பம் ஆகும்? பல இடங்களிலுள்ள சபையாரை சந்திக்கும் படியான வேதாகம முகாம்களும், கருத்தரங்குகளும் எப்பொழுது நடக்கும்? கிறிஸ்துவின் பிரதான கட்டளைப்படி பல இடங்களுக்குச் சென்று கிறிஸ்துவின் நற்செய்தியை சுதந்திரமாக சொல்லும் நாட்கள் எப்பொழுது என்ற கேள்விகள் வந்து **கர்த்தாவே எது வரைக்கும்** என்று எண்ண வைக்கவே செய்கிறது.

சூழ்நிலை இப்படி அச்சுறுத்துவதாக இருந்தாலும் ஓர் **ஆறுதலான செய்தி** இங்கே நமக்கு இருக்கிறது. ஆம், இந்த விதமாக கேள்வி எழுப்பின தேவ மனிதர்களுக்கு தேவன் **கடைசி வரைக்கும் இதே நிலை தான்** என்று பதிலளிக்கவில்லை. மாறாக, அவர்கள் சூழ்நிலையை மாற்றினார். அவர்களை வெகுவாகப் பாதித்த பாரமான பிரச்சினைகளிலிருந்தும், அவர்களை உடைத்து நொறுக்கிச் சீரழித்து சின்னாபின்னமாக்கிய சூழ்நிலை களிலிருந்தும் அவர்களை விடுதலையாக்கி, ஞானி சாலமோனைக் கொண்டு தான் அருளிய வார்த்தைகள் சத்தியமானவை என்று நிரூபித்தார். **நிச்சயமாகவே முடிவு உண்டு உன் நம்பிக்கை வீண் போகாது** என்று (நீதி 23:18).

வழக்கமாக நாம் நம் தலைப்பிற்கான பின்னணி குறித்துத் தெரிந்து கொள்வோம். அதற்கு பதிலாக, இம்மாதம் நம் தலைப்பிற்கான சொற்றொடரைப் பயன்படுத்திய தேவ மனிதர்கள் சிலர் குறித்து கவனிக்க உள்ளோம்.

முதலாவது, தாவீதன் தன் பாடல்களில் குறைந்தது இரண்டு இடங்களில் இவ்விதம் வினவியுள்ளார். **கர்த்தாவே எதுவரைக்கும்** என்னை மறந்திருப்பீர்? **எதுவரைக்கும்** உமது முகத்தை எனக்கு மறைப்பீர்? என்று (சங்கீதம் 13;1). இச்சங்கீதத்தைப் பாடும் போது தாவீது நெருக்கத்தின் மத்தியில் இருந்தான். ஆம், சவுல் அவனை வேட்டையாட அலைந்து கொண்டிருந்த நேரம் அது. தான் பக்திக்குப் பரிசு கிடைக்கவில்லையே என்ற சோர்வு அவனுக்குள்ளாக இருந்த படியால், கர்த்தாவே, எது வரைக்கும் என்று அங்கலயத்துள்ளான். அடுத்து, சங்கீதங்களில் ஒரு பன்னிரெண்டை எழுதின ஆசாப், இவன் ஒரு லேவியன், தாவீதின் சங்கீத சேவையில் தன்னை இணைத்துக்கொண்டவர்களில் இவனும் ஒருவன் (I நாளாகமம்; 15:17; 20:14;) இவன் தன் வாழ்வின் ஒரு கட்டத்தில், **எது வரைக்கும் கர்த்தாவே** நீர் என்றென் றைக்கும் கோபமாயிருப்பீரோ! உம்முடைய எரிச்சல் அக்கினியைப் போல் எரியுமோ? (சங்கீதம் 79:5) என்று புலம்பியுள்ளான்.

மூன்றாவதாக, மேசியா தீர்க்கதரிசியாகிய ஏசாயாவும் இதே விதமாக கேட்டுள்ளான். **அப்பொழுது நான் ஆண்டவரே எதுவரைக்கும்** என்று கேட்டேன் (ஏசாயா 6: 11) இம்மாபெரும் தீர்க்கன் தன் தீர்க்கதரிசன ஊழியத்துக்கு அழைக்கப்பட்ட நிலையில் கர்த்தரின் வெளிப்பாட்டை முழுமையாக உள்வாங்கிக் கொள்ள முடியாமல் இவ்விதம் கேள்வி எழுப்பினான். அக்கேள்விக்கான பதில் **குறிப்பிட்ட காலம் வரைக்கும்** என்பது. (6:12) அடுத்ததாக, ஆபகூக் தீர்க்கதரிசி. வேதத்தை நேசிப்பவர்களால் பெரிதாகக் கண்டுகொள்ளப்படாத ஒரு தீர்க்கன். உயிரோட்டமும், கற்பனை வளமும் கொண்ட ஒரு தீர்க்கன். யெகோவா தேவனுடைய வல்லமை, மகிமை, இரக்கம், நீதி, நியாயம் பற்றி பேசும் இவன் **கர்த்தாவே, நான் எதுவரைக்கும்** உம்மை நோக்கிக் கூப்பிடுவேன் நீர் கேளாமல் இருக்கிறீரே! கொடுமையினிமித்தம்! நான் **எது வரைக்கும்** உம்மை நோக்கிக் கூப்பிடுவேன். நீ இரட்சியா மலிருக்கிறீரே! இருக்கிறீரே! என்றான் (ஆபகூக் 1 : 2)

ஆக, அருமையானவர்களே, எதுவரைக்கும் கர்த்தாவே என்னும் கேள்வி தேர்ந்த தேவ மனிதர்கள் வாழ்விலும் இருந்துள்ளது. நாம் கவனித்த இந்த நான்கு பேரும் தங்கள் பக்திக்கும், தெய்வீகச் செயல் பாடுகளுக்கும் பெயர் பெற்றவர்கள். தேவனுக்கான சேவையில் தங்களைப் பாங்குற ஈடுபடுத்தியவர்கள். அவர்களும் தங்கள்

வாழ்வின் ஒரு கட்டத்தில் எக்கச்சக்க சூழலைக் கடந்து செல்ல வேண்டியவர்களாகவே இருந்துள்ளனர். ஆகவே, நாம் நம் வாழ்வில் எதிரான சூழ்நிலைகளை சரீர வாழ்விலும், ஆன்ம வாழ்விலும் கடந்துபோக நேரும்போது சோர்ந்து போக வேண்டிய அவசியமில்லை.

**எதுவரைக்கும் கர்த்தாவே** என்பதை நாம் மேலும் புரிந்து கொள்ளும்படியாக ஆதியாகமம் நாட்களிலிருந்து பிரபலமான ஒரு தேவ மனிதனை உங்கள் கண்களுக்கு முன்பாகக் கொண்டு வருகிறேன். அவன் வேறு யாருமல்ல. அவன் வாழ்ந்த காலத்தில் இருந்த ஏராளமானவர்களுக்குள்ளே கர்த்தரின் கண்களில் கிருபை பெற்றுக் கொண்ட நோவா (ஆதியாகமம்6:8). இவன் பக்தி செயல்பாட்டை தேவன் தேர்ந்த வார்த்தைகளால் அலங்கரிக்கிறார். நீதிமான், உத்தமன் என்று (ஆதியாகமம்6:9) இப்படிப்பட்ட நோவா கூட தன் வாழ்வில் **எதுவரைக்கும் கர்த்தாவே** என்று கேட்கும் சூழ்நிலையைக் கடந்து வந்தே உள்ளார் என்பதையும், அதற்கு தேவன் நோவாவை அது நிரந்தரமானது அல்ல என்று பதில் கொடுத்ததையும் நாம் இப்பொழுது கவனிப்போம்.

### I எதுவரைக்கும் இந்த மக்கள் மத்தியில் வாழ்வது?

**எதுவரைக்கும் கர்த்தாவே** என்பதிலிருந்து நமக்கு கிடைக்கும் முதல் பாடம் தேவன் குறிக்கும் காலம்வரை பொல்லாத உலகத்தில் நாம் வாழ்ந்துதான் ஆக வேண்டும் என்பது.

நோவா தன் பக்தி வாழ்வில் உச்சம் தொட்ட மாமனிதன். நீதிமான், உத்தமன் என்னும் சிறப்பு வார்த்தைகள் போதாததால் தேவனால் உயிரோடு வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இருவரில் ஒருவனாகிய ஏனோகிற்கு பயன்படுத்தப்பட்டுள்ள **தேவனோடு சஞ்சரித்தான்** என்னும் அரிய வார்த்தை இவனுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒருவேளை மூன்றாவதாக ஒருவனை எடுத்துக் கொள்ள தேவன் எண்ணியிருந்தால் அந்த பாக்கியம் நோவாவிற்கு கிடைத்திருக்குமோ! யாருக்குத் தெரியும்?

இப்படிப்பட்ட நோவா யாருக்கு மத்தியில் ஒரு 600 ஆண்டுகள் வாழ்ந்துள்ளார் பாருங்கள். அவன் வாழ்ந்த காலத்தில் மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகி அவன் இருதயத்தின் நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாதாக இருந்துள்ளது. இவர்களுக்கு மத்தியில்தான் நீதிமானும், உத்தமனும், தேவனோடு சஞ்சரித்தவனுமான நோவா 600 ஆண்டுகள் வாழ்ந்துள்ளான். எப்படி இருந்திருக்கும்?! அவன் மனநிலை? **எவ்வளவு காலம் கர்த்தாவே, எதுவரைக்கும் கர்த்தாவே,** என்று தேவனை நோக்கி கேட்டிருக்க மாட்டானா?

இரத்தம் சம்பந்தமான குடும்ப உறுப்பினர் ஒருவருடைய நடவடிக்கை நமக்கு பிடிக்கவில்லை என்றால் கூட அவர்களோடு குடும்பத்தில் இருப்பது வெறுப்பை ஏற்படுத்தி விடுகிறது. பணியாற்றும் இடத்திலோ. தொழில் செய்யும் இடத்திலோ ஆகாதவர்கள் இருந்தால் எப்படா இடத்தைக் காலி செய்வோம் என்ற எண்ணம் வந்து விடுகிறது. அப்படித்தானே! **ஆனால், பொல்லாதவர்களோடு நோவா வருடக் கணக்கில்** காலம் தள்ளியுள்ளாரே மகிழ்ச்சியாகவா காலத்தை ஓட்டி இருப்பார்?! **எதுவரைக்கும் கர்த்தாவே** என்று கேட்டிருப்பார் தானே!

ஆகையால், அருமையானவர்களே! கர்த்தருடைய பிள்ளைகள் இந்த உலகத்தில் வாழும் போது இந்த உண்மையைப் புரிந்தவர்களாக இருப்பது அவசியம். ஆண்டவர் தன் சீடர்கள் ஊழியத்துக்கு அனுப்பும்போது ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புவது போல இதோ நான் உங்களை அனுப்புகிறேன் என்று கூறியுள்ளார். (மத்தேயு 10:16) இந்த உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது என்று யோவான் ஆசிரியர் கூறுகிறார். (1 யோவான்5:19). உலகம் இப்படித்தான் இருக்கும். பவுலடியார் பிலிப்பியருக்குச் சொல்லும்போது கோணலும், மாறுபாடுமான சந்ததி என்கிறார் (பிலிப்பியர்2:15). இவர்களுக்கு மத்தியில் குற்றமற்றவனாக நான் எப்படி வாழ்வது, எவ்வளவு காலம் வாழ்வது என்கிற நிலை கிறிஸ்தவர்களுக்கு ஒரு வேளை இருந்தாலும் நோவா போல் நாம் நீதியையும், உத்தமத்தையும் காத்து வாழ வேண்டும். பிரளயத்திற்குப் பிறகு நோவா வாழ்ந்த அடுத்த 350 ஆண்டுகள் அவனுக்கு நிறைவான ஆண்டுகளாக இருந்ததுபோல் நமக்கும் இப்பூலோக வாழ்வு முடிந்து நித்திய வாழ்வுக்குள் பிரவேசிக்கும்போது அது இன்பமயமான ஆண்டுகளாக இருக்கும்.

II **எது வரைக்கும் இந்த ஜனங்களுக்குப் பிரசங்கிப்பது?**

எதுவரைக்கும் கர்த்தாவே! என்பதிலிருந்து நமக்கக் கிடைக்கும் அடுத்த பாடம், நற்செய்தி அறிவிப்பதில் நாம் சோர்வுக்கு இடம் கொடுக்க கூடாது என்பது.

இந்தப் பொல்லாத உலகத்தைப் பாவத்தின் பிடியிலிருந்து மீட்க வந்த இயேசுவானவர், பிதாவின் நோக்கத்தின்படி தன் ஊழியத்தை நிறைவேற்றி, தேவனுடைய செயலின்படி உயிரோடு எழுப்பப்பட்டு பரமேறுவதற்கு முன் கொடுத்த பிரதான கட்டளை, **நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ கிருஷ்டிக்கும்** சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்பது (மாற் 16:15). அத்தோடு நிறுத்தாமல், இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். (மத்தேயு 28:20). இப்பிரதான

கட்டளையில் ஒளிந்திருக்கும் ஓர் உண்மை **பிரசங்கிக்கும் வேலை என்பது உலகம் முடியும் வரை செய்யப்பட வேண்டிய ஒன்று என்பது.** இக்கட்டளைப்படி தான் இன்றளவும் பூமியில் பிரசங்கிக்கும் வேலை ஓயாமல் நடைபெற்று வருகிறது.

இப்பிரசங்கப் பணிக்குத் தாயம் போட்டவர் நோவா தான். ஆதியாகமம் இந்த உத்தமனை **பிரசங்கி** என்று குறிப்பிட விட்டாலும், புதிய ஏற்பாட்டு எழுத்தாளனும், அப்போஸ்தலனும், முதல் நற்செய்திப் பிரசங்கியுமான பேதுரு நோவாவை **நீதிப் பிரசங்கி** என்று அழைக்கிறார். பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல் நீதியைப் பிரசங்கித்தவனாகிய நோவா முதலான எட்டு பேரைக் காப்பாற்றி என்று [II பேதுரு 2:5]. இந்தப் பிரசங்க வேலையை பேதுரு அப்போஸ் தலன் இயேசுவின் பிரதிநிதியாய் எப்படிச் செய்தானோ அது போலவே நோவாவும், கிறிஸ்துவின் பிரதிநிதியாய்ச் செய்துள்ளான். **அந்த ஆவியிலே அவன் போய் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தான். அந்த ஆவிகள் பூர்வத்திலே நோவாவின் பேழையை ஆயத்தம் பண்ணும் நாட்களிலே,** தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற் போனவைகள்.[I பேதுரு3:19,20],

சரி, இப்படி நோவா பேழையையும் கட்டிக்கொண்டு பிரசங்கிக்கும் வேலையையும் 120 **ஆண்டுகள்** செய்துள்ளார். பொதுவாகவே மனித இயல்பு உழைப்புக்கேற்ற ஊதியமும், பிரயாசத்திற்கு உண்டான பலனும் உடனடியாக கிடைக்க வேண்டும் என்பது. ஒரு காய்கறி விதையை ஊன்றினால் கூட அது முளைத்து விட்டதா என்று அடுத்த நாளே போய் குழியை எட்டிப் பார்ப்போம். அதே மனநிலைதான் பொதுவாக பிரசங்கிகளுக்கும், குறிப்பாக நற்செய்திப் பிரசங்கிகளுக்கும் இருக்கும். ஆனால், இந்த நோவா பிரசங்கி பத்துப் பைசாவுக்குப் பலனில்லாமல் 120 ஆண்டுகள் பிரசங்கித்துள்ளார். ஒரு பத்து ஆண்டுகள், 20 ஆண்டுகள் பிரசங்கித்து ஒரு ஆள் கூட மனந்திரும்பாத நிலையில் **எதுவரைக்கும் கர்த்தாவே** என்று கேட்டிருக்க மாட்டானா? மறுபடியும் ஒரு 50/60 ஆண்டுகள் கழித்து **இன்னும் எவ்வளவு காலம்** நான் பிரசங்கிக்க வேண்டும், பேசாமல் பேழையைக் கட்டுகிற வேலையை முழுநேரம் செய்தால் கூட சீக்கிரம் முடியுமே என்று முறுமுறுத்திருக்க மாட்டானா? இல்லையா? கர்த்தர் நோவாவை எவ்வளவு காலம் பிரசங்கிக்கச் செய்தார் சொல்லுங்கள் பார்க்கலாம். **அன்றைய உலகம் அழியும்வரை** நீ பிரசங்கித்துத்தான் ஆகவேண்டும் என்ற போது அப்படியே அமைதி காத்தார். இதன் மூலம் அழிவின் காலம் வரை மனம் திரும்ப தேவன் அவகாசம் கொடுக்கிறார். அந்த அழிவின் காலம் என்பது சரீர அழிவாகவோ, உலகத்தின் அழிவு காலமாகவோ இருக்கலாம்.

அருமையானவர்களே! கிறிஸ்துவின் நற்செய்தி ஊழியர்களாகவும், கிறிஸ்துவின் சபை அங்கங்களாகவும் இருக்கும்போது கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிப்பதிலும், பல இடங்களுக்குக் கொண்டு செல்வதிலும் சோர்வுக்கோ, தொய்வுக்கோ இடம் கொடுக்கக் கூடாது. பெரு வெள்ளக் காலத்துக்கு முந்தின உலகம் அழியும் வரை பொறுமை காத்த தேவன், நம்முடைய காலத்திலும் மனந்திரும்ப வாய்ப்பு கொடுத்து நீடிய பொறுமையோடு காத்துக் கொண்டுள்ளார். [II பேதுரு3:9] ஆகவே, நற்செய்தி அறிவிக்கக் கடன்பட்டுள்ள நாம் ஒவ்வொருவரும் சோர்வுக்கும், எதிர்ப்புக்கும் ஏளனத்திற்கும் எள்ளளவும் இடம் தராமல் நற்செய்தியைப் பேச்சும், மூச்சுமாகக் கொண்டு செயல்பட வேண்டும். செய்வோமா?

III. **எதுவரைக்கும் இந்த பேழைக்குள் முடங்கிக் கிடப்பது?**

எதுவரைக்கும் கர்த்தாவே என்பதிலிருந்து நமக்கு கிடைக்கும் இன்னும் ஒரு பாடம், புதிய விடியலுக்காக பாடுகளை அனுபவித்துத் தான் ஆகவேண்டும் என்பது.

பிரசங்க வேலையைச் செய்துகொண்டே நோவா பிரம்மாண்ட பேழையைத் தேவன் கொடுத்த அளவின்படியும், வழிகாட்டுதல் படியும் கட்டி முடித்துவிட்டார். ஆதியாகமம்7:22 – ஐ பாருங்கள் **நோவா அப்படியே செய்தான். தேவன் தனக்குக் கட்டளை யிட்டபடியெல்லாம்** அவன் செய்து முடித்தான். ஆக, பிரசங்கிக்கும் பணியும், போழைப்பணியும் ஒரு வழியாக நிறைவுக்கு வந்தது.

இப்போது அடுத்த சவால் மிருகங்களையும், பறவைகளையும் தேவன் குறிக்கும் எண்ணிக்கையில் ஜோடு ஜோடாக பேழைக்குள் சேர்க்க வேண்டும். **சர்க்கஸ்**களில் இந்தக் காட்டு விலங்கினங்கள் **ரிங் மாஸ்டர்களை** எப்படிப் பாடுபடுத்தும் என்பதை நாம் கவனித்து இருக்கிறோம். இத்தனைக்கும் அவை பயிற்சி பெற்றவை. அப்படி யானால், ஆயிரங்களில் இருந்த மிருகங்கள், அதுவும் சுதந்திரமாக திரிந்தவைகள் இவைகளை பேழைக்குள் அடைக்கப்பட்டிருந்ததை எண்ணிப் பாருங்கள். அப்படியே பறவைகள், ஒருவேளை கர்த்தர் அதற்கான சிறப்பு ஏற்பாட்டைச் செய்திருந்தாலும் அப்பணி சவாலான பணியே. அதையும் செய்து முடித்தார் நோவா.

பிறகு, நோவாவையும் குடும்பத்தையும் பேழைக்குள் விட்டு கதவை தேவன் அடைத்து நோவா திறக்கக்கூடாதபடி செய்து விட்டார். நோவா 600 வயது 2 மாதம்17 நாள் ஆனபோது பூமியில் ஊற்றுக்கண் பிளந்து வானத்தின் கதவுகள் திறக்கப்பட்டது 40 நாள் பூமியின்மேல் பெருமழை பெய்தது. பேழை மிதக்க ஆரம்பித்தது. வீடுகள் மூழ்கின, மரங்கள் காணாமல் போனது, உயர்ந்த மலைகளும் இருந்த இடம் தெரியாமல் போனது. ஆதியாகமம் 7,11 8,19 எங்கும்

வெள்ளம், பெருவெள்ளம். பிறகு நோவா 601 வயது 2 மாதம் 27 நாள் ஆன நிலையில் தண்ணீர் வடிந்து பூமி காய்ந்தது. பேழையை விட்டு புறப்பட தேவன் அனுமதி கொடுத்தார். [ஆதியாகமம் 8:15,16] இதுதான் எங்களுக்கே தெரியும் என்கிறீர்களா, பொறுங்கள்.

பேழைக்குள் இருந்த 375 நாட்களும் நோவா குடும்பத்தோடு எவ்வளவு பாடுபட்டிருப்பார் என்பதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? மிருகங்கள் பொதுவாக வீட்டுக்கு வெளியேதான். செல்லப் பிராணிகளும் கிட்டத்தட்ட அப்படித்தான். உள்ளே அனுமதித்தால் ஒருவித வாடையும், துர்நாற்றமும் வரும். ஆனால் நோவா 375 நாட்கள் வாழ நேர்ந்த பேழைக்குள் ஆயிரங் களில் பறவைகளும், மிருகங்களும், விதவிதமாக எழுப்பின சத்தங்களையும், அவைகளில் இருந்து வெளிவந்த எச்சங் களையும், அதனால் உண்டான நெடியையும் எண்ணிப் பாருங்கள் ஒரு நாள், இரண்டு நாள், ஒரு வாரம் என்றால் சமாளிக்கலாம். 375 நாட்கள் எப்படி இருந்திருக்கும்? **எதுவரைக்கும் கர்த்தாவே இன்னும் எத்தனை நாள் கர்த்தாவே** என்று அவன் கேள்வி எழுப்பி இருப்பானா? இல்லையா? திருமதி நோவாவும் இவர்களோடு வசமாக மாட்டிக் கொண்ட அந்த மூன்று இளம் திருமதிகளும் எப்படி எல்லாம் இந்தத் திருவாளர்களை ஏசியிருப்பார்கள்! சொல்லவா வேண்டும்?!

ஆனால், தேவத் திட்டம் அவன்375 நாட்கள் அவைகளை ஏற்று சகிக்க வேண்டும் என்பது. **எதுவரை கர்த்தாவே, இன்னும் எத்தனை நாள் கர்த்தாவே** என்று அவன் எத்தனை முறை கேட்டிருந்தாலும் தேவன் குறிக்கும் நாள்வரை அவை தொடரவே செய்தது. ஆஹா, அதன் பிறகு, ஒரு புதிய உலகம்? 600 ஆண்டுகள் யாருக்கு மத்தியில் அல்லல்பட்டு வாழ்ந்தானோ அந்தப் பொல்லாத ஜனம் இல்லை. நீதிப் பிரசங்கத்தை ஏற்க மறுத்த கடின இருதயம் உள்ள மக்களும் இல்லை அவன் தூக்கத்தைக் கலைத்து நிம்மதிக்கு சவால்விட்ட மிருகங்கள் மற்றும் பறவைகளின் தொல்லைகள் இல்லை. அவன் விரும்பு படியான ஒரு புதிய விடியல் அடுத்த ஒரு 350 ஆண்டுகள் நிம்மதியான வாழ்க்கை.

அருமையானவர்களே! இந்த உண்மையை நாம் நம் பக்தி வாழ்வில் கற்றுக் கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் மீது நம்பிக்கை உள்ள நாம் கூட, நீதி வாசம் செய்யும் புதிய வானம், புதிய பூமியும் உண்டாகும் என்று காத்திருக்கிறோம் 2 பேதுரு3 :13 அப்படியானால் இப்பூமியில் நாம் பாடுகளை அனுபவித்துத்தான் ஆகவேண்டும். படுகிற பாடுகளுக்கு நிச்சயமாக பலனுண்டு. ஆகையால், விசுவாசத்தில் உறுதிப்பட்டவர்களாயும் அசையாதவர்களாயும் கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்போம் [1 கொரிந்தியர்15:58] ஆமென்! ஆமென்!!

# புதிய ஏற்பாட்டு ஒற்றுமை

Bro. J.C. **சோட்**

**கி**றிஸ்தவ உலகமானது இன்று மதரீதியாகப் பிளவுபட்டுள்ளது. அதாவது, கத்தோலிக்கம், ப்ரோடஸ்டன்ட் சபைகள், மார்க்கப் பிரிவினைக் கூட்டங்கள், சமுதாய சபைகள் என்று பல விதமாகப் பிரிந்துள்ளது. எல்லா சபைகளும் கர்த்தரையே சேவிப்பதாகச் சொல்லிக் கொள்ளுகின்றன. அதே நேரத்தில் தங்களுக்குள்ளே எங்கேயோ தவறு நடந்திருக்கிறது என்பதை இவர்கள் உணரா தவர்களாக இருக்கின்றனர். அதன் விளைவாகத்தான் இவ்விதமான மத அமைப்புகளுக்கிடையே ஒற்றுமையைக் கொண்டு வருவதற்கான பல முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மத அமைப்புகளின் தலைவர்கள் தங்களுக்குள்ளே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காகப் பல மாநாடுகளை, சுவிசேஷக் கூட்டங்களை, கருத்தரங்குகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் விழிப்படைந்து, ஒற்றுமைக்காக முயற்சிக்கிறார்களே என்று இவர்களை மெச்ச முடியாது.

ஏனென்றால், நம் தேவன் பிரிவினையையும், குழப்பத்தையும் வெறுக்கிறார். உதாரணமாக, கொரிந்து பட்டணத்திலிருந்த கர்த்தருடைய சபையில் சில பிரிவினைகள் உருவாயின. உடனே பவுல் அவர்களைக் கடிந்து கொண்டார். Iகொரி.1:10–17, **சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும், ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்.** ஏனெனில், என் சகோதரரே, உங்களுக்குள்ளே வாக்குவாதங்கள் உண்டென்று குலோவேயாளின் வீட்டாரால் உங்களைக் குறித்து எனக்கு அறிவிக்கப்பட்டது. உங்களில் சிலர்: நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால், நான் இப்படிச் சொல்லுகிறேன். கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலுவையிலறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்? என் நாமத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தேனென்று ஒருவனும் சொல்லாதபடிக்கு, நான் கிறிஸ்புவுக்கும், காயுவுக்குமேயன்றி, உங்களில் வேறொருவனுக்கும் ஞானஸ்நானங் கொடுக்கவில்லை; இதற்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். ஸ்தேவானுடைய வீட்டாருக்கும் நான் ஞானஸ்நானங் கொடுத்தேனா இல்லையோ அறியேன். ஞானஸ்நானத்தைக்

கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை; சுவி சேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார்; கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப் போகாதபடிக்கு, சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே அனுப்பினார்.

மேற்கண்ட வசனப்பகுதியில் அப்போஸ்தலனாகிய பவுல், ஒற்றுமைக்கான வேண்டுகோள் விடுக்கிறார். பிரிவினைகளோடு இடைபடும்போது, பவுல், கொரிந்தியரின் பொருத்தமற்ற அந் நிலையை அவர்களுக்குப் புரியவைக்க அவர்களிடம் மூன்று கேள்விகளைக் கேட்கிறார். **முதலாவது**, கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? கேட்டார். நிச்சயமாக கிறிஸ்து பிரிந்திருக்கவில்லையென்பது அவர்களுக்குத் தெரியும். **இரண்டாவது** கேள்வி, பவுலா உங்களுக் காகச் சிலுவையிலறையப்பட்டான்? இல்லை கிறிஸ்து தான் அவர்களுக்காகச் சிலுவையில் அறையப்பட்டார் என்பதும் தெரியும். **மூன்றாவதாக**, பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்? இதுவும் இல்லையென்பதுதான் பதில். அவர்கள் கிறிஸ்துவின் நாமத்தினாலே தான் ஞானஸ்நானம் பெற்றார்கள். பாருங்கள், இங்கே முடிவு என்னவென்றால், எல்லோரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றா யிருக்க வேண்டும் என்பதுதான்! இது எவ்வளவு எளிமையான உபதேசமாக இருக்கிறது என்பதை நாம் சிந்தித்து அதின்படி செயல்பட வேண்டும்.

கொரிந்து பட்டணத்துச் சபையில் இத்தகைய பிரச்சனைகள் நிறைந்திருந்தபடியால் தான், நான் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வரவில்லை, ஞானஸ்நானம் கொடுக்க வந்தேனென்று யாரும் எண்ணிவிடாதபடி, ஒரு சிலருக்கு மாத்திரமே தான் ஞானஸ்நானம் கொடுத்ததாகப் பவுல் சொல்லுகிறார். வேறுவிதமாகச் சொன்னால், பவுல் தன் பணியின் நோக்கம் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதுதான் என்கிறார். இதன் விளைவாக, தானாகவே சிலர் அவருடைய கைகளினாலே ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள். இங்கே, பவுல் ஞானஸ்நானத்திற்கு எதிராக எதையும் போதிக்கவில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. அப்படி யிருந்தால் அவர் ஒருவருக்கும் ஞானஸ்நானங் கொடுத்திருக்கவே மாட்டார். ஆனால், சூழ்நிலைகளின் காரணமாக, பவுல் சிலருக்கு மாத்திரம் ஞானஸ்நனங்கொடுத்ததைக் குறித்துச் சந்தோஷப் படுகிறார்.

ரோமர் 16:17,18 வசனங்களில் பவுல், அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினை களையும், இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள்

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து, நயவசனிப்பினாலும், இச்சகப் பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக் கிறவர்களாயிருக்கிறர்கள் என்கிறார். இங்கே பவுல் சொல்லும்போது, பிரிவினையை உண்டாக்குகிறவர்கள் தனியாகக் குறிக்கப்பட்டு, அவர்களை விட்டு விலக வேண்டுமென்கிறார். நாம் ஏன் அப்படிச் செய்ய வேண்டும்? ஏனென்றால், அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யாமல், தங்கள் நயவசனிப்பினாலும் இச்சகப் பேச்சினாலும் கபடற்றவர்களின் இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள். ஆகவேதான் பவுல், அப்படிப் பட்டவர்கள் மெச்சப்பட வேண்டும், புகழப்பட வேண்டும் என்று சொல்லாமல் அப்படிப்பட்டவர்களை விட்டு விலக வேண்டுமென்று அறிவுறுத்துகிறார்.

✝

தேவன் இல்லாமல் சிரிஷ்டிப்பு இல்லை
இயேசு கிறிஸ்து இல்லாமல் இரட்சிப்பு இல்லை
தேவ ஆவியானவர் இல்லாமல் ஆறுதல்
இல்லை
* விசுவாசம் இல்லாமல் கிறிஸ்தவம் இல்லை
* ஜெபம் இல்லாமல் ஜெயம் இல்லை
* வேத வசனம் இல்லாமல் வாழ்க்கை இல்லை
* அவர் சித்தம் இல்லாமல் வேலை இல்லை
* அவர் கிருபை இல்லாமல் ஆசீர்வாதம் இல்லை
* அவர் அன்பு இல்லாமல் மன்னிப்பு இல்லை
* அவர் பிரசன்னம் இல்லாமல் அமைதி இல்லை
* அவர் வல்லமை இல்லாமல் பாதுகாப்பு
இல்லை
* அவர் இரண்டாம் வருகை இல்லாமல் நமக்கு
நியாய தீர்ப்பு இல்லை
* கடைசி ஆதாம் இல்லாமல் உயிர்த்தெழுதல் இல்லை
* பரிசுத்தம் - நீதி இல்லாமல் நித்திய வாழ்வு
இல்லை
* பரம பிதா - இயேசு கிறிஸ்து - பரிசுத்த
ஆவியானவர் இல்லாமல் தேவ இராஜ்ஜியம்
இல்லை .

பெண்கள் பகுதி

# நம்முடைய பிள்ளைகளை நாம் ஏன் இழந்து கொண்டுள்ளோம்?

Sis. **ரேச்சல் நாயகம்**

**ந**ம்முடைய இம்மாத தலைப்பு எல்லா குடும்பங்களுக்கும், சபைக்கும் பொருந்தி வருகிறதாகவே உள்ளது. தேவனுடைய மக்களாகிய நாம் பிள்ளைகளை இழந்தே வருகின்றோம். வாலிபத்தை எட்டும் வயதிலேயே ஏறக்குறைய 70% பிள்ளைகள் இவ்வாறு இழக்கப்பட்டுப் போகின்றனர். மிகவும் விலையேறப்பெற்ற சொத்துக்களாகிய நம்டைய பிள்ளைகள் வளர்ந்து, வீட்டையும், தேவனையும் விட்டு விலகிச் செல்வது ஏன் ? எப்படி இது முடிகிறது? அவர்களில் நாம் அன்பு கூரவில்லையா? மிகச் சிறந்தவைகளை நாம் அவர்களுக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறோமல்லவா? ஆவிக்குரிய வழிகளை அவர்களுக்கு காட்டாமலாயிருந்தோம்? அவர்களுடைய ஆத்துமாக்களில் அக்கறை செலுத்தவில்லையா? அவர்கள் பரலோகம் செல்வதை நாம் பார்க்க விரும்பவில்லையா?

நாம் இவைகளையெல்லாம் செய்து கொண்டுதான் இருக்கிறோம் என நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், இந்த வாழ்விலும், வரப்போகிற வாழ்விலும் அவர்கள் இழந்து போகவே நாம் அனுமதித்துக் கொண்டிருக்கிறோம். இருதயமே சுக்கு நூறாக உடைந்து போகும் அளவு வேதனை தரும் விஷயமாகவல்லவா இது இருக்கிறது! நம் பிள்ளைகள் மாத்திரம் தங்களை தேவனுக்கு ஒப்புக் கொடுத்து வாழ்வார்களானால், அது பெற்றோர்களாகிய நமக்கும் சமாதானமாக இருக்கும். அவர்கள் குடும்பத்துக்கும், இந்த உலகத்திற்கும், அவர்கள் சார்ந்துள்ள சபைக்கும் ஆசீர்வாதத்தை கொண்டுவரக் கூடியதாக இருக்கும்.

நமக்கிருக்கும் சொத்தே நம்டைய பிள்ளைகள்தான். நமக்கு சந்தோஷத்தையும், மகிழ்ச்சியையும் கொண்டுவரக் கூடியவர்களே நம் மக்கள் தான். ஆனால், பல குடும்பங்களின் நிலை எவ்வாறு உள்ளது? ''இன்றைக்கு நம்மோடு இருக்கும் பிள்ளைகள் நாளை எங்கோ சென்று விடுகின்றனர். நம்டைய வேலை, ஓயாத அலுவல் இவைகள் நிமித்தம் வருடங்களை உருண்டோடச் செய்து விடுகிறோம். நம்டைய பிள்ளைகளுக்கான சிறந்த திட்டத்தை தீட்டுகிறோம். மிகச் சிறந்ததை கொடுக்க விரும்புகிறோம். ஆனால் நாமே உலக பொருளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, நமது அன்றாட வாழ்வில் ஆவிக்குரிய காரியங்களுக்கு போதுமான அளவு அனுமதி கொடுக்காமல் வாழ்ந்து விடுகிறோம். அதனடிப்படையில் பிள்ளைகளையும் கெடுத்து விடுகிறோம்.

நம் பிள்ளைகளை நேசிக்கிறோம். உண்மைதான். ஆனால், நம் அன்பை அவர்களிடம் காட்ட நாம் நேரத்தை ஒதுக்குவதில்லை. அவர்களுக்கு வேண்டியதையெல்லாம் வாங்கித் தருகிறோம். ஆனால், நம்முடைய நேரத்தை அவர்களுக்கு கொடுக்கிறோமா? தேவையான அளவு நாம் அவர்களை கண்காணிக்கிறோமா? பயனற்ற, நலமில்லா காட்சிகளை தொலைக்காட்சியில் பார்க்க அனுமதித்துக் கொண்டிருக்கிறோமா?. வருடா வருடம் அவன் பள்ளியில் படிக்கும்போது பரிணாமம், நாத்திக நம்பிக்கை இவைகளைப் படிக்க வைத்துவிட்டு, அவனுக்கு வேண்டிய அடிப்படை விசுவாசத்தை சொல்லிக் கொடுக்காமல், தவறான கொள்கைகளை எதிர்க்கும் திறனை வளர்க்காமல் இருக்கிறோமா?

தீய நண்பர்கள், ஆவிக்குரிய வாழ்க்கைக்குத் தடையாய் இருக்கும் சமுதாய ஈடுபாடு இவைகளினின்று அவர்களை விலக்க முயற்சிக்கிறோமா? எல்லாவற்றிற்கும் மேலாக நாம் மாதிரியான வாழ்க்கையை அவர்கள் வாழ்ந்து காட்டிக் கொண்டிருக்கிறோமா? நாமே பலவீனமான கிறிஸ்தவர்களாக இருந்து கொண்டு நம் பிள்ளைகள் பலமுள்ள விசுவாசிகளாக மாற வேண்டும் என்று எதிர்பார்க்கக்கூடாது. தீமோத்தேயுவுக்கு பவுலடியார் கூறும்போது ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற் போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான் (1தீமோ 5:8) என்கிறார். தொடர்ந்து கற்றுக் கொடுப்பது, பயிற்சியளிப்பது, பிள்ளைகளை இணங்க வைத்தல், போன்ற வைகளை ஞானத்தோடும், அன்போடும் கற்றுக்கொடுக்க முயற்சிக்கவே வேண்டும்.

பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான் (நீதி : 22:6) என்று ஞானி சாலமோனின் வார்த்தைகள் எவ்வளவு உண்மையிலும் உண்மை. பெற்றோரின் அஜாக்கிரதையால்தான் பிள்ளைகள் கெட்டுப்போய் விடுகின்றனர். அநேக பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அவர்களாகவே வளர்வதற்கு அனுமதித்து விடுகிறார்கள். உலகப் பிரகாரமான பெற்றோர்களுக்கும், கிறிஸ்தவப் பெற்றோர்களுக்கும் கட்டாயம் வேறுபாடு உள்ளது. தன் மகன் வாரத்தின் முதல் நாள் காலையில் ஆராதனையா? பலவித விளையாட்டா? எதை தெரிந்தெடுக்கலாம் என்ற நிலை வரும் போது, ஆராதனை தான் முக்கியம் என்று கண்டித்து புத்தி சொல்லும் பெற்றோர்களாக நாம் இருக்க வேண்டும். நல்ல தகப்பன் தன் பிள்ளைக்கு உந்துதலை ஏற்படுத்தக்கூடியவராக இருக்கிறார். குழந்தைகள் இரட்சிக்கப்படுவது அவசியம். தேவன் இதை எதிர்பார்க்கிறார். ஒருவேளை பிள்ளைகளைக் கண்டிக்காத,

ஏனோ தானோ என்ற நிலையில் உள்ள பெற்றோர் உடனே தங்கள் நிலையில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். எந்த சிட்சையும், தற்காலத்தில் சந்தோஷமாய் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சாமாதான பலனைத் தரும் [எபி: 12:11] என்று எபிரேயர் ஆசிரியர் கூறுகிறபடி, சிறுவயதில் கண்டித்து, கண்டனம் பண்ணி புத்தி சொல்லி வளர்ப்பதால் நம் பிள்ளைகளை ஒரு நல்ல தகப்பனாகவும், தாயாகவும் விளங்கும்படி உதவி செய்கிறோம்.

பிள்ளைகள், இழந்து போவதற்கு பிரதான காரணம் பெற்றோரே. இவர்களின் சுயநலத்தால், கேட்பாரற்ற சமுதாயமே உருவாகி விடுகிறது. மதுவுக்கு அடிமைகள், வீட்டை விட்டு வெளியேறுதல், குற்றவாளிகள் உருவாதல் போன்றவைகளோடு நின்றுவிடாமல் சிறை தண்டனை, மரண தண்டனை இவை யாவும் பெற்றோரால் கைவிடப்பட்ட குழந்தைகளுக்கு ஏற்படுகிறது. இந்நிலையையும் பெற்றோர் நினைத்தால் மாற்றடியும். பொறுமையோடும், அன்போடும், ஒவ்வொரு நாளும், வேதத்தை எடுத்து, அவர்களோடு சேர்ந்து வாசித்து, விளக்கிச் சொல்லி, ஜெபிக்கச் சொல்லி, வேத வசனங்களின் முக்கியத்துவத்தையும் அவர்களுடைய படிப்பு, வேலை, பொறுப்புகள், இவைகளோடு சரீரத் தேவைகளையும் பெற்றோர் பிள்ளைகளுக்குச் செய்யவேண்டும். தகுதியான உடைகளை உடுத்துகிறார்களா? பெரியவர்களுக்கும், அதிகாரத்தில் உள்ளவர்களுக்கும் மதிப்பு கொடுக்கிறார்களா? என கவனிக்க வேண்டும்.

ஆவிக்குரிய ரீதியில் பிள்ளைகள் வளர்க்கப்பட சரியான ஒரு வழி சபையில் நம் பிள்ளைகளின் பங்கு. வேதபாட வகுப்புகள், வேத விளக்க வகுப்புகள், ஆராதனை, வாலிபர் முகாம், வேதாகம முகாம்கள், வேதாகம கருத்தரங்குகள், சுவிசேஷ கூட்டங்கள் இவை யாவற்றிலும் தவறாமல் பங்கு கொள்ளச் செய்ய வேண்டும். நம் பிள்ளைகளை ஊழியம் செய்ய அனுப்ப வேண்டும். அல்லது ஊழியத்தைத் தாங்கச் செய்ய வேண்டும்.

இவ்வாறு பெற்றோரும் சபையாரும் சேர்ந்து எப்படியாவது, எந்த வழியிலாவது நம் பிள்ளைகளை இழந்து போகாமல் காப்பாற்ற வேண்டும்.

பவுல் கூறுகிற ஆலோசனையைப் பார்ப்போம். பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள். இது நியாயம் உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது.

பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப் படுத்தாமல் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக (எபேபி: 6:1–4)

கிறிஸ்துவுக்குள் பிரியமான தாய்மார்களே! வேத வசனம் சொல்லும் ஆலோசனைப்படி செய்தால் கீழ்ப்படிதலான, ஆசீர்வாதமான பிள்ளைகளை உருவாக்க முடியும். வளர்க்க வேண்டிய வயதில் அவர்களாகவே வளர அனுமதித்து விட்டு விட்டு, கடைசியில் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கும் நிலையை தவிர்ப்போம். கர்த்தர், ஈவாக நமக்கு கொடுத்த பிள்ளைகளை ஆவிக்குரிய நிலையில் இழந்து போகாமல், அவர்கள் ஆத்துமாவுக்கு உத்திரவாதமாக நாம் இருப்பதால், நம் பொறுப்பை உண்மையோடு செய்வோம்! நம் பிள்ளைகளைக் காப்போம் !!.

# நாளும், நடப்பும்

1. **இந்தியா முழுவதும் பெட்ரோல், டீசல் விலை வரலாறு காணாத அளவு உயர்வு.**
2. **வரும் நவம்பர் 1 முதல் எல்லா வகுப்புகளையும் திறக்க தமிழக அரசு அனுமதி.**
3. **கேரளத்தில் கனமழை மற்றும் நிலச்சரிவு காரணமாக லட்சக் கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.**
4. **நாடு முழுவதும் கொரோனா தடுப்பூசி எடுத்துக் கொண்டோர் எண்ணிக்கை 100 கோடியை நெருங்குகிறது.**
5. **இந்த ஆண்டுக்கான ஐபிஎல் தொடரை சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வென்றது.**

வாலிபர் பகுதி

# ஆறுக்குத் தேவையான மூன்று

Dr. **ஏபில் நாயகம்**

**கி**றிஸ்துவுக்குள் பிரியமான வாலிபர்களே! உங்கள் யாவருக்கும் இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். சர்வ வல்லமையுள்ள தேவன், அவர் சிருஷ்டித்த மனிதனிடத்தில் எதிர்பார்ப்பது ஒன்றுதான். **அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிகிற வாழ்வு.** ஆதாம் தொடங்கி, இன்று வரை இது தான் தேவனுடைய எதிர்பார்ப்பு. கீழ்ப்படிதல் என்ற ஒரு செயலில், அன்பு, மரியாதை, பயம் என அனைத்தும் அடங்கிவிடும். எனவே, அவருக்கு நாம் கீழ்ப்படிந்தாலே அந்த வாழ்க்கை அவர் எதிர்பார்க்கிற பரிசுத்த வாழ்க்கையாக இருக்கும். அந்த வகையிலே மனித வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திற்கும் குறிப்பான சில அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கிறது. குழந்தைகளுக்கு, வாலிபர்களுக்கு, கணவனுக்கு, மனைவிக்கு என்று அந்தந்த வாழ்க்கைக் கட்டங்களுக்குத் தேவையான அறிவுரைகள் விளம்பிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த அறிவுரைகளை நாம் அறிந்திருக்கிறோமா? ஆம், என்றால் அதற்கு நாம் கீழ்ப்படிந்து அதின் படி வாழ்கிறோமா? இது சிந்திக்க வேண்டிய விஷயம்!

இப்பூமியில், தேவனுக்குக் கீழ்ப்படிந்து வாழ்வது ஒரு சவாலே! ஆதிகாலமுதல் இந்த சவால் இருக்கத்தான் செய்தது. ஆனால், இச்சவால்களையும் வென்ற தேவ மனிதர்கள் இருந்தார்கள் என்பது. நம்மாலேயும் அப்படி வாழ முடியும் என்ற நம்பிக்கையை தருகிறது. கிறிஸ்தவனாக வாழ்வது கடினம் என்ற பொதுவான கருத்து இன்று நிலவுகிறது. அதிலும் குறிப்பாக வாலிபப் பருவத்தில் இது மிக கடினம் என்று பலர் சொல்ல நாம் கேட்டிருக்கலாம். இதற்கு காரணம் நம்மை சுற்றி நெருங்கி நிற்கிற பாவங்கள் அந்த பாவத்தில் பங்காளிகளாக்க முற்படும். தவறான நண்பர் கூட்டம். நண்பர்கள் நமக்குத் தேவையே! ஆனால், அவர்கள் எவ்விதத்திலும் நம் பரிசுத்த வாழ்வை கெடுக்கிறவர்களாக இல்லாமலிருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

வாலிபர்களுக்கான அறிவுரை என்றாலே அதில் அடிக்கடி பயன்படுத்தபடும் வசனப்பகுதி II தீமோ 4:12 ஆகும். **உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு.** இதில் ஒரு ஆறு காரியங்கள் குறித்து

தீமோத்தேயுவுக்கு அறிவுரை வழங்கப்படுகிறது. இந்த ஆறு காரியங்களைக் கடைபிடித்தால் போதும் என்று விடாமல், இவையனைத்திலும் மாதிரியாக இருக்க வேண்டும் என்று பவுல் கூறுகிறார். மற்றவர்கள் பார்த்து உணர்வடைகின்ற அளவிற்கு அது இருக்க வேண்டும் என்பது தான் அதில் பொதிந்திருக்கும் பொருள்.

1. **வார்த்தையிலும்** நம் வாயிலிருந்து புறப்படுகிற வார்த்தைகள் எப்படி இருக்கிறது? சங் 19:14ல் என் வாயின் வார்த்தைகள் உமது சமுகத்துக்குப் பிரியமாய் இருப்பதாக என்று வாசிக்கிறோம். கொலோசேயர் 4:6 நம் வசனம் (வார்த்தை) கிருபை பொருந்தினதாய் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறது.

2. **நடக்கையிலும்** நம் நடக்கை அல்லது நடத்தை பிறரால் கவனிக்கப்படுகிற ஒரு காரியம். நம் வாயின் வார்த்தை களினால் மாத்திரம் பரிசுத்தமாய் வாழ்ந்து விட முடியாது. அது நம் செயலிலும் செயல்பாட்டிலும் பிரதிபலிக்க வேண்டும். அப்போஸ்தலர் 1:1,2 ஆகிய வசனங்களில் இயேசு கிறிஸ்துவைப் பற்றி வசனம் என்ன சொல்கிறது என்பதை கவனியுங்கள் செய்யவும், உபதேசிக்கவும், ஆம், உபதேசத் தோடு நிற்காமல் செயல்படுத்தி காட்டினார் என்று வாசிக்கிறோம். நாமும் நம் நடக்கைகளை நம் போதனை களோடு தொடர்புடையவைகளாக மாற்ற வேண்டும். II யோவான் 3:18 ல் வாசிக்கிறது போல வசனத்தினாலும் நாவினாலுமில்லாமல், கிரியையினாலே நாம் நம்முடைய தேவனை மகிமைப்படுத்த வேண்டும். I பேதுரு 1:15 ல் உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள் என்று பேதுரு சொல்வதை நாம் நடைமுறைப்படுத்த வேண்டும். நம் நடக்கை, பிறர் நம்மை யார் என்று தீர்மானிக்கும் ஒரு உபாத்தியாய் இருக்கிற படியால், அதிலே நாம் மிகவும் கவனமுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

3. **அன்பிலும்** இதை நாம் இரண்டுவிதமாகப் பார்க்க முடியும். ஒன்று தேவனிடம் நாம் வைக்கும் அன்பு, மற்றொன்று சக மனிதர்களிடம் நாம் காட்டும் அன்பு இரண்டும் ஒரு கிறிஸ்தவனுக்கு தேவை. ஒன்றை மட்டும் செய்து அதினாலே நம் அன்பு பூரணமானது என்று நம்மால் சொல்ல இயலாது. தேவன் மீது நாம் வைக்கும் அன்பு நம்மை தேவனிடம் கிட்டிச் சேர்க்கிறது. மனிதர்கள் மீது நாம் வைக்கும் அன்பு நாம் தேவ பிரமாணத்தை நிறைவேற்ற

உதவுகிறது. நாம் தேவன் மீது கொண்டிருக்கும் அன்பானாலும் சரி, அல்லது மனிதர்கள் மீது காட்டும் அன்பாக இருந்தாலும் சரி, தேவை ஒன்றுதான்; நம் அன்பு மாயமற்ற அன்பாக இருக்க வேண்டும். [ரோமர் 12:9 ; II கொரி 6:6: 1பேதுரு 1:22].

4. **ஆவியிலும்** – இதன் பொருள் உற்சாகமாக செயல்படுவதாகும். நாம் ஆவியில் சோர்வுடையவர்களாக இல்லாமல், தேவனுடைய காரியங்களில் தீவிரத்தோடு ஈடுபடவேண்டும். நம் ஆவியில் நாம் கொண்டிருக்கும் உற்சாகமே நற்கிரியைகளைச் செய்ய உதவும். சங் 51:12ல் **உற்சாகமான ஆவி என்னை தாங்கும் படி செய்யும்** என்று தாவீது பாடுவதை நாம் வாசிக்க முடியும். நாம் ஆவியில் எப்பொழுதும் உற்சாகத்துடனும், உத்வேகத்துடனும் இருப்பது அவசியம்.

5. **விசுவாசத்திலும்** – விசுவாசம் கிறிஸ்தவர்களுக்கு அடிப்படையான ஒன்று. அதுவே நம் அஸ்திபாரமாயுமிருக்கிறது. அஸ்திபாரம் உறுதியாய் இருந்தால் மட்டுமே அதன் மேல் கட்டுபடும், நம் விசுவாச வாழ்க்கை நிலைத்து நிற்கும். கற்பாறையின்மேல் கட்டுகிற புத்தியுள்ள மனிதர்களாக நாம் இருக்க வேண்டும். நாம் தேவன் மீது வைத்திருக்கும் விசுவாசம் உறுதியானதாக, [1பேது 5:9] மாயமற்றதாக [II தீமோ 1:4] இருக்க வேண்டும். அதே நேரத்தில் அது செயல்படுகிற விசுவாசமாகவும் இருக்க வேண்டும். கிரியை இல்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது என்பது நாம் அறிந்த ஒன்றே.

6. **கற்பிலும்** – ஆங்கிலத்திலே purity என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதினுடைய அர்த்தம் சுத்தமான, ஒரு குறையுமில்லாத ஒரு நிலை. II கொரி 6:6 ல் பவுல் இதே வார்த்தையை, ஊழியப் பணியில் ஒருவரும் குற்றப்படுத்த முடியாத ஒரு நிலையை விளக்க பயன்படுத்துவதைப் பார்க்க முடியும். அதாவது, நம் எண்ணத்திலும், சிந்தையிலும், செயல்கள் அனைத்திலும் பிறரால் குற்றம் சாட்டப்படாத அளவிற்கு சுத்தமாகவும் சீராகவும் இருக்க வேண்டும். சரீரபிரகாரமான வெளிப் புறத்திலாகிலும், ஆவிக்குரிய ரீதியில் உட்புறமாகிய நம் இருதயத்திலாகிலும் குற்றமற்ற நிலையை அடைய நாம் முற்பட வேண்டும் என்பதையே இது குறிக்கிறது.

ஆக பவுல் தீமோத்தேயுவிற்கு இந்த ஆறு காரியங்களிலும் கவனமாய் இருக்கும்படி அறிவுறுத்துகிறார். இதை அன்றாட வாழ்க்கையில் தொடர்ந்து செயல்படுத்தும் பொழுது நமக்கு சோர்வு வரக் கூடும். நாம் அனைவரும் அறிந்த படி கிறிஸ்தவ வாழ்க்கை என்பது ஒரு நெடிய பயணம். எனவே சோர்வு தவிர்க்க முடியாத ஒன்று. ஆனால், சோர்வு நம் உறுதியை நிலைகுலையச் செய்துவிடக் கூடும் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். அப்படியானால் என்ன செய்வது?

அடுத்த வசனத்தில் மூன்று காரியங்களில் ஜாக்கிரதையாயிரு என்று தீமோத்தேயுவுக்கு பவுல் எச்சரிப்போடு அறிவுரை கூறுகிறார். I தீமோ 4:13ல் **நான் வருமளவும் வாசிக்கிறதிலும், புத்தி சொல்கிறதிலும் உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிரு** என்று.

வாலிபர்களே, 12 ஆம் வசனத்தில் சொன்ன ஆறு காரியங்களை நாம் சிறப்பாக செய்ய, 13 –ம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கும் மூன்று காரியங்கள் நமக்கு உதவியாயிருக்கும்.

1. **வாசிக்கிறதிலும்** – வாசிப்பது என்பது ஆராய்ந்து பார்ப்பது, தியானிப்பது என்று பொருள்படும். நாம், வேத வாசிப்பை நம் அன்றாட வாழ்வின் ஒரு பகுதியாக மாற்றிக்கொள்ள வேண்டும். பெரோயா பட்டணத்தாரைப் பற்றி நாம் அப். 17:11ல் என்ன வாசிக்கிறோம்? ஆம் அவர்கள் தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தார்கள். அது அவர்களுக்கு எவ்வாறு உதவினது? அவர்கள் நற்குண சாலிகளாயிருக்க உதவினது அவர்களின் கிரியைகள் நற்கிரியையாயிருக்கவும், விசுவாசம் உறுதியாக இருக்கவும் வேத வாசிப்பும், தியானமும் அவர்களுக்கு உதவினது இயேசுவும் யோவான் 5:39 ல் **வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு...** என்று சொல்கிறார். ஆக, வேத வாசிப்பு நம் வாழ்வின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்று என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

2. **புத்தி சொல்கிறதிலும்** – புத்தி சொல்கிறதும் உபதேசம் செய்வதும் ஒன்றல்ல. நாம் ஏற்கனவே கவனித்தது போல கிறிஸ்தவ வாழ்வில் தொய்வும், சோர்வும் வராமலிருக்க நாம் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்த வேண்டும். புத்தி சொல்லுதல் என்ற சொல் இந்த அர்த்தத்தையுடையதாகவே

உள்ளது. உதாரணமாக, எபிரேயர் 10:25ல் சபைகூடி வருதலை விட்டுவிடாமல் இருக்க ஒருவருக்கொருவர் புத்திசொல்லக் கடவோம் என்பது சபை கூடி வரும் காரியத்தில் இதயத்தில் தொய்வு ஏற்படாமல் இருக்க நாம் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்த வேண்டும் என்ற பொருளை கொடுக்கிறது. அப்படி புத்தி சொல்வது நமக்கும் நம் சகோதரர்களுக்கும் பிரயோஜனமாயிருக்கும்.

3. **உபதேசிக்கிறதிலும்** – நாம் நம்முடைய விசுவாசத்தின் உறுதியையும், அடிப்படையையும் பிறருக்குச் சொல்ல ஆயத்தமாக இருக்க வேண்டும். அது நம்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது. இளம் ஊழியனான தீமோத்தேயுவுக்கு பவுலின் அறிவுரையை வாசியுங்கள். II தீமோ 2:1 ல் **நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு.** ஆம், நாம் நிதானமாய் பகுத்து போதிக்கத் திராணியுள்ளவர்களாக இருக்க வேண்டும். தேவனைப் பற்றியும் மனுகுலத்திற்கான இரட்சிப்பின் திட்டத்தையும் நாம் பிறருக்கு போதிக்க வேண்டும். அது வேதத்தின் காரியங்களை கற்றுத் தேற நமக்கு உதவியாயிருக்கும்.

ஆக பிரியமானவர்களே, I தீமோ 4:12,13 ஆகிய வசனங்கள் ஒன்றோடொன்று தொடர்புடையதாகவே இருக்கிறது. நாம் வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும் தேறவும், தேறி அதில் நிலைத்திருக்கவும் நாம் வாசிக்கிறவர்களாயும் புத்தி சொல்லுகிறவர்களாயும், உபதேசிக்கிறவர்களாயும் இருக்க வேண்டும். இவை நாம் கடைபிடிக்க வேண்டிய ஒன்று. நானும், நீங்களும் இதை செய்து தேறின வாலிபர்களாக நாம் அங்கமாக இருக்கும் சபைகளுக்கு தீமோத்தேயுவாக இருந்து செயல்படுவோம். ஆமென்!! ✝

## விலகியிரு

1. **மனுஷனை நம்புவதற்கு விலகியிரு – சங் 118:8**
2. **பண ஆசைக்கு விலகியிரு – 1 தீமோ 6:10**
3. **உலக சிநேகத்திற்கு விலகியிரு – யாக். 4;4,1 யோவான் 2:15**
4. **வீண் பேச்சிற்கு விலகியிரு – ஐ கொரி. 15:13**
5. **மிஞ்சின எண்ணங்களுக்கு விலகியிரு – ரோ.12:3**

சிறுவர் பகுதி

# உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கட்டும்

Dr. பிரெய்சி

**ஹ**லோ குழந்தைகளே! எப்படி இருக்கீங்க ? நலமாகவும், பள்ளி மீண்டும் திறக்கும் நாளை ஆவலோடு எதிர்பார்க்கிறவர்களாகவும் இருப்பீர்கள் என நம்புகிறேன். வேதாகமத்தைப் படிக்கவும், இக்கட்டுரையை வாசிக்க இடையூறாக இருப்பவைகளை நீங்கள் ஒதுக்கி வையுங்கள் சரியா?

கடந்த பல மாதங்களாக சௌகரியமாக அடைக்கப்பட்டிருந்த உங்கள் வீடுகளை விட்டு வெளியேறி பள்ளிகளுக்கும், **ட்யுசன்** வகுப்புகளுக்கும், இன்னும் வேறு பிடித்தமான இடங்களுக்கும் நண்பர்களோடு, குடும்பத்தாரோடு விரைவில் செல்ல உள்ளீர்கள். நாம் தேவனுடைய பிள்ளைகள் என்பதை பிறருக்குக் காட்டுவதற்கு இதுதான் சரியான நேரம்.

இம்மாதம், நாம் இந்த உலகத்தின் மத்தியில் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்று இயேசு ஆண்டவர் போதித்த ஒரு வேத பகுதியைக் காட்டப்போகிறேன் அதன் மூலம் நீங்கள் எப்படிப் பட்டவர்களாக மற்றவர்களுக்கு முன்பாக இருக்க வேண்டுமென்று நினைப்பூட்ட இருக்கிறேன் அவ்வளவுதான்.

என் அன்புப் பிள்ளைகளே! கிட்டத்தட்ட கடந்த இரண்டு வருடங்களாக வீட்டில் இருக்கும்போது குறும்பு செய்யும் சுட்டிகளாக, இன்னும் பெற்றோருக்கு தொந்தரவு கொடுக்கும் பிள்ளைகளாக இருந்திருப்பீர்கள். இப்பொழுது நீங்கள் வெளியே செல்லும் நேரம் வந்துவிட்டது இச்சமயத்தில் நீங்கள் ஒவ்வொருவரும் நினைவில் கொள்ள வேண்டிய முக்கியமான காரியங்கள் உண்டு.

**மத்தேயு** ( 5:14-16) வசனங்களில் இயேசு ஆண்டவர் உலகத்தின் மத்தியில் நம் வெளிச்சம் எப்படிப் பிரகாசிக்க வேண்டும் என்று கூறியுள்ளார். நற்காரியங்கள் செய்வதன் மூலமும், பிறருக்கு உதவி செய்வதன் மூலமும், இன்னும் பெற்றோருக்குக் கீழ்ப்படிவதின் மூலமும் நாம் நம் வெளிச்சம் பிறர் காணும்படியாகச் செய்ய முடியும். அதன் மூலம் மற்றவர்கள் நம் விசுவாசத்தை

தெரிந்து கொள்ள முடியும். தேவனுடைய ஒரே பேறான இயேசு ரட்சகர் எப்பொழுதும் தன் பரலோக தகப்பனுக்குக் கீழ்ப்படியும் பிள்ளையாக இருந்தார் என்பது எப்பொழுதும் நம் நினைவில் இருக்கவேண்டும். நாமும் அவரைப் போலவே இருக்க வேண்டும்

அன்பு பிள்ளைகளே! தொடர்ந்து நற்காரியங்கள் செய்கிறவர் களாக இருந்து, எப்பொழுதும் பெற்றோருக்குக் கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருங்கள். இயேசுவை அறியாத மற்ற பிள்ளைகளுக்கு எப்போதும் நல்ல மாதிரியாக இருங்கள். நீங்கள் ஒவ்வொருவரும் நல்ல பிள்ளைகளாயும், கீழ்ப்படியும் பிள்ளை களாகவும் மாற்றத்தைக் காட்டுவீர்கள் என்றும் நம்பிக்கையோடு இக்கட்டுரையை எழுதுகிறேன்!

**மிகுந்த அன்புடன்**
**ப்ரெய்சி அக்கா.**

---

## இம்மாத கேள்விகள் [மத்.5:14-16]

1. இந்த வேத வசனப்படி உலகில் நாம் யாராக இருக்கிறோம்?
2. நாம் என்ன செய்ய வேண்டும்?
3. தேவநாமம் மகிமைப்பட நாம் என்ன செய்யமுடியும்?
4. நம்முடைய வெளிச்சத்தை எப்படிப் பிரகாசிக்கச் செய்ய முடியும்?
5. உங்கள் வெளிச்சத்தை எப்படிப் பிரகாசமாக்கப் போகிறீர்கள்?

# நவீன விக்கிரகாராதனை

Bro. **பென்னி மார்ட்டின்**

**அ**ருமையான திருமறை ஆசான் வாசகர்களே, அவசரமும், பரபரப்பும் நிறைந்த இந்த யுகத்தில் எல்லாமே நவீனமயமாகி நம் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துகின்றன. ஆனால், பழைய ஏற்பாட்டின் நாட்களில் தேவனால் அருவருக்கப்பட்ட விக்கிரகாராதனை நாளுக்கு நாள் நவீன அவதாரம் எடுத்து, ஒவ்வொரு மனித இருதயத்தையும் விக்கிரக தொழிற் சாலையாக மாற்றி வருகிறது. தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கொடுத்த பத்து கட்டளைகளில் முதல் கட்டளையே விக்கிரகாரதனை வேண்டாம் என்பதாயிருக்கிறது **என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம் மேலே வானத்திலும் கீழே பூமியிலும், பூமியின் கீழ் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உண்டாக்க வேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்** (யாத்திராகமம் 20:3-5). புதிய ஏற்பாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் எந்த விக்கிரகத்தையும் ஆராதிப்பதில்லையே அதற்கும் நமக்கும் எந்த சம்பந்தமும் இல்லையே என்று தப்பாக தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் உள்ளப் பூர்வமான உண்மை என்னவென்றால் தேவனுக்கு இரண்டாம் இடத்தைக் கொடுத்து ஒரு பொருளின் மீதோ அல்லது ஒரு நபரின் மீதோ அதிகமாக கவனத்தை செலுத்தும் போதோ அல்லது அவைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதோ விக்கிரக ஆராதனையாக மாறிவிடுகிறது. விக்கிரகம் என்பது மனிதனால் பக்தியின் அடிப்படையில் படைக்கப்பட்ட ஒரு பொருளாகும். பழங்கால விக்கிரகாராதனையாக இருந்தாலும் சரி நவீன விக்கிரகாராதனையாக இருந்தாலும் சரி, அது தேவனை விட்டு விலகி தேவனுக்கு மாற்றாக ஒன்றைத் தழுவிக் கொள்வதாகும். சிலருக்கு உலக ஆஸ்திகள் அவர்களின் ஆஸ்தான விக்கிரகமாக மாறி விடுகிறது. அவர்கள் சதா எப்போதும் அதையே சிந்தித்துக் கொண்டு, அதற்கு முக்கியத்துவம் கொடுப்பதால் விக்கிரகாராதனை செய்பவர்களாகி விடுகிறார்கள். சிலருக்கு பொழுது போக்கு நிகழ்ச்சிகள் விக்கிரகமாக மாறி பொழுதெல்லாம் அவர்களுடைய சிந்தையை ஆக்கிரமித்து ஆத்துமாக்களுக்கு உலை வைத்து விடுகிறது.

இவைகளைக் குறித்து சற்று விரிவாகவும், வியரமாகவும் வேதத்தின் வெளிச்சத்தில் பார்த்து இத்தகைய நவீன விக்கிரகாராதனையிலிருந்து நம்மை நாம் விலக்கிக் காத்துக் கொள்வோம்.

I **பொருளாசை எனும் விக்கிரகாராதனை**

நம்மில் பலர் விக்கிரகாராதனை என்றால் விக்கிரகங்களை உண்டாக்கி அதை வணங்க வேண்டும் அல்லது பிற மதகோயில் களுக்குப் போய் அவைகளை வணங்க வேண்டும். அதை நாம் செய்வதில்லை. எனவே, விக்கிரகாரதனையிலிருந்து நாம் வெகுதூரத்தில் இருக்கிறோம் என்று நினைத்துக் கொண்டிருக்கி றோம். ஆனால், அப்போஸ்தலனாகிய பவுல் கொலோசே பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு எழுதும் போது, ஆகையால் விபசாரம், அசுத்தம், மோகம், துர்ச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டு பண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப் போடுங்கள் என்று எழுதுகிறார் ( கொலோசெயர் 3:5). பணப்பசி நிறைந்த இவ்வுலகில் பலர் தங்கள் உயிரைப் பணயம் வைத்து பயணங்கள் மேற்கொண்டு பொருள் ஈட்டுகிறார்கள். இவ்வுலகில் ஒரு நல்ல வாழ்க்கையை வாழ பொருள் ஈட்டுவதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால், போட்டி போட்டுக் கொண்டு பொருள் ஈட்டி ஆத்துமாவை நஷ்டப்படுத்துவதைத் தான் வேதாகமம் தவறு என்று சுட்டிக்காட்டுகிறது. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில், ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்றார் (லூக்கா 12:15). ஆவிக்குரிய காரியங்களில் ஆவலில்லாமல் சதா உலகப் பொருள்களையே சிந்தித்துக் கொண்டிருப்பவர்கள் தங்கள் சமாதானத்துக்கு சமாதி கட்டுவது மட்டுமல்லாமல் தங்கள் ஆத்துமாக்களை அதலப் பாதாளத் திற்கு அழைத்துச் செல்கின்றனர். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் இந்த விபரீத விளையாட்டில் விழுந்து விடாத படி விக்கிரகார தனைக்கு விலகியிருந்து விண்ணுலகிற்கு மகிமையை ஏறெடுப்போம்.

II **சரீரம் எனும் விக்கிரகாராதனை**

இன்றைய நாட்களில் உலகெங்கும் மனிதர்கள் முன்னெப்போது மில்லாத அளவுக்கு தங்கள் சரீரங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை நம்மால் பார்க்க முடிகிறது. அழகுகலை நிலையங்களும், உடற்பயிற்சி மையங்களும் காளான்களைப் போல் காணும் இடங்களிளெல்லாம் காட்சி அளிக்கின்றன. ஆண்களும், பெண்களும் கோடிக் கணக்கான பணத்தை தங்கள் சரீரங்களுக்காக கொட்டித் தீர்க்கிறார்கள். தேவன் நமக்கு கொடுத்த சரீரத்தை பேணிக்காப்பது நம் கடமைதான். ஆனால், அதற்கென அதீத அக்கறை காட்ட வேண்டிய அவசியமில்லை. சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது. தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும், இதற்குப்

பின்வரும் ஜீவனுக்கும் வாக்குதத்தமுள்ளதாகையால் எல்லா வற்றிலும் பிரயோஜனமுள்ளது. என்று வேதாகமும் நம்மை எச்சரிக்கிறது (I தீமோத்தேயு 4:8).

இன்றைய நாட்களில் பெரும்பாலான மக்கள் தங்கள் சரீரத்தைக் குறித்து சதா சிந்தித்து, அதைப் பேணுவதற்கு பெரும்பொருளை செலவு செய்ய தயாராக இருப்பதனால் அழகுக்கலை மையங்கள் மற்றும் உடற்பயிற்சி மையங்கள் உலகம் முழுவதும் வியாபித்திருக்கின்றன. இந்த சரீர முயற்சிகளினால் எந்த நன்மையும் இல்லை என்று வேதாகமம் சொல்லவில்லை. இவைகளில் அற்ப பிரயோஜனம் உண்டு என்றுதான் வேதாகமம் சொல்கிறது. பல பயிற்சிகள் செய்து. உணவுக்கட்டுப்பாட்டுடன் இருந்து சரீரத்தை கட்டுக்கோப்புடன் வைத்திருந்தால் நம்மை விரக்தியடையச் செய்யும் வியாதிகளிடமிருந்தும் விடுபடலாம். நம்மை மண்ணை கவ்வச் செய்யும் மருத்துவ செலவுகளிலிருந்தும் விடுபடலாம். இப்படி சில சொற்ப அற்ப நன்மைகள் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், இவைகளெல்லாம் குறுகிய கால அளவு கொண்ட இவ்வுலக வாழ்க்கையோடு முடிந்து விடுகிறது. ஆனால், தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்கு பின்வரும் ஜிவனுக்கும் வாக்குத்தத்த முள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது. எனவே, அற்ப நன்மைகளுள்ள சரீர முயற்சி அவசியமா அல்லது அதீத நன்மைகளுள்ள தேவபக்தி அவசியமா என்பதைப் பற்றி முடிவெடுக்கும் முழுப்பொறுப்பு நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. ஜனங்கள் தேவனுக்கு கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தையும் முதலிடத்தையும் விட்டுவிட்டு சதா சரீரத்தைப் பற்றி சிந்திக்கும்போது அது அவர்கள் சிந்தையை அதிகமாக ஆக்கிரமித்து, ஆதிக்கம் செலுத்தி அது விக்கிரகாராதனையாக மாறிவிடுகிறது.

எனவே, பிரியமான தேவனுடைய பிள்ளைகளே, விக்கிர காராதனை என்பது ஒன்றுமறியாமல் குறும்புத்தனமாகச் செய்யும் செயலோ அல்லது மாற்றுப் பாதையோ அல்ல. அது எல்லா வடிவத்திலும் தேவனுக்கு விரோதமானதும் தேவனை நிராகரிக்கும் ஒரு செயலாகும். பழைய ஏற்பாட்டின் நாட்களில் விக்கிரகாராதனை தேவனுக்கு அருவருப்பாயிருந்தது இக்காலத்திலும் விக்கிரகாரா தனை தேவனுக்கு அருவருப்பாகத்தான் இருக்கிறது. இன்றைய நாட்களிலும் பல கிறிஸ்தவர்கள் தேவனுக்கு கொடுக்கவேண்டிய முக்கியத்துவத்தையும், முதலிடத்தையும் விட்டுவிட்டு பணம் பட்டம் பதவி என்று இவைகள்மீது இதயத்தைப் பதிக்கும்போது உலகப் பொருள்களிலும், உறவுகளிலும் உள்ளப்பூர்வமாக தங்கள் உற்சாகத்தைக்காட்டும்போது மறைமுகமாக விக்கிரகாராதனையில் ஈடுபட்டு விடுகிறார்கள் இது நவீன விக்கிரகாரதனையாகும். இது நம்மை நலிவடையச் செய்து விடும். நற்பிதாவிடமிருந்து வெகுதூரத்திற்கு அழைத்துச் சென்று விடும். ✞

# எனப்பட வெட்கப்படவில்லை!

Bro. **பாண்டியன்**

ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக! வேதாகமத்தில் நமது தேவன் பல பெயர்களில் அழைக்கப்படுகிறார். அதில் ஒன்று பிதாக்களின் தேவன் என்பது (உபா 1:11) மோசேயிடம் தன்னை வெளிப்படுத்தும்போது நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிற உங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர்(யாத் 3:15) என்று குறிப்பிடுகிறார். இந்த மூன்று நபர்களின் தேவன் நான் என்பதில் தேவன் பெருமிதம் கொள்கிறார் என்பதைத்தான் புதிய ஏற்பாட்டில் அவர் வெட்கப்படுகிறதில்லை! என்று (எபி 11:16) கேள்விப்படுகிறோம். சர்வவல்லவர், எல்லாவற்றையும் அதாவது மனிதன் உட்பட யாவற்றையும் சிருஷ்டித்தவரும், என்றென்றைக்கும் ஜீவிக்கிறவருமான மகாதேவன் சாதாரண மனிதர்களுடைய பெயரைக் குறிப்பிட்டு அவர்களுடைய தேவன் நான் என்பதில் அவர் தயங்கவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒரு விஷயமாகும்.

ஒரு குடும்பத்தில் பிள்ளைகள் நல் ஒழுக்கத்தில் தவறும் போது சாதாரணமாக பெற்றோர்கள் அவனை என் பிள்ளை என்று சொல்வதற்கு வெட்கமாக இருக்கிறது என்றெல்லாம் சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். நம்முடைய தேவனைப் பற்றி சங்கீதக்காரன் குறிப்பிடும் போது உமக்குப் பயப்படும் பயத்தால் என் உடம்பு சிலிர்க்கிறது, உமது நியாயத்தீர்ப்புகளுக்கு பயப்படுகிறேன் என்கிறான் (சங் 119:120) உதாரணமாக, இஸ்ரவேலரை விடுவிக்க மறுத்த பார்வோனையும், எகிப்தியரையும் பத்துவிதமான வாதைகளால் கலங்கடித்தவர் நம் தேவன். மேலும், வனாந்தரத்தில் லட்சக்கணக்கான ஜனங்களுக்கு ஆகாரத்தையும், தண்ணீரையும் 40 வருடங்களாக அற்புதவிதமாக கொடுத்து போஷித்தவர், ஆபத்து நிறைந்த வனாந்தரத்தில் அதிசயமாக பகலில் மேகஸ்தம்பம், இரவில் அக்னிஸ்தம்பம் ஆகியவற்றால் பாதுகாத்தவர்.

அது மாத்திரமல்ல, அவருடைய கட்டளைகளை மீறும்போது அவர் பட்சிக்கிற அக்கினியாய் இருக்கிறார். உதாரணமாக, ஓய்வுநாளில் விறகு பொறுக்கினவனின் மரணம், தேவனுடைய பெட்டி தொட்ட ஊசாவின் சாவு, ராஜாவாயிருந்தும் உசியாவி நெற்றியில் குஷ்டம், புதிய ஏற்பாட்டில் அனனியா, சப்பிராள் மரணம்

போன்ற சில காரியங்கள் தேவனுடைய கோபத்தையும், நியாயதீர்ப்பையும் வெளிப்படுத்துகிறது. அவர் சொல்ல ஆகும், கட்டளையிட நிற்கும் என்பது அவருடைய வல்மையைத் தெரிவிக்கிறது. இப்படிப்பட்ட பயபக்திக்குரிய தேவன்தான் சாதாரண மனிதர்களின் பெயரைக் குறிப்பிட்டு **அவர்கள் தேவன் எனப்பட வெட்கப்படுகிறதில்லை** என அறியும் போது நமக்கு அது ஆச்சரியத்தை உண்டு பண்ணுகிறதல்லவா?

அதற்கான காரணத்தைச் சற்று பார்க்கலாம். முதலாவது ஆபிரகாம் வீடு, வாசல், மனைவி, பெற்றோர், இனத்தார் என்று வசித்துக் கொண்டிருந்த போதுதான் தேவன் அவனைப் பார்த்து, நீ உன் தேசம், இனம் மற்றும் உன் தகப்பனுடைய வீட்டை விட்டுப் புறப்பட்டு, நான் உன்னை காண்பிக்கும் தேசத்துக்குப் போ், நான் உன்னை ஆசீர்வதிப்பேன் என்று அழைத்த போது, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான் (எபி 11:8) இது சாதாரண விஷயமல்ல. இப்படிப்பட்ட கேள்வி கேட்காத விசுவாசம் நம்மில் இருக்கிறதா? இல்லையெனில் நாம் முயற்சிக்க வேண்டும். தேவனுடைய வார்த்தையை கேள்வி கேட்காமல் விசுவாசிக்க வேண்டும். வயதான காலத்தில் பிள்ளை பிறக்கும் என்று நம்புவற்கு ஏதுவில்லாத விஷயத்தை ஆபிரகாம் நம்பிக்கையோடே விசுவாசித்தான். (ரோமர் 4:18) இன்னும் உச்சக்கட்டமாக தன் குமாரனைப் பலியிடவும் துணிந்தான். அதனால் தான் உன் சந்ததிக்குள் (ஆதி22:18) என்ற கிறிஸ்துவைப் பற்றிய பெரிய வாக்குத்தத்த ஆசீர்வாதத்தைப் பெற்றான்.

அடுத்தபடியாக, ஈசாக்கைப் பற்றிப் பார்க்கப்போனால் குறைவான விஷயங்களே இவரைப் பற்றிப் பார்க்கிறோம். முக்கியமாக தீமையோடே எதிர்த்து நிற்க வேண்டாம் என்ற கிறிஸ்துவின் உபதேசத்தை இவன் வாழ்வில் நாம் காணலாம். இவன் வாழ்ந்த காலத்தில் பெலிஸ்தர் நிறைய தொல்லைகளை இவனுக்குக் கொடுத்தார்கள். அதில் ஒன்று, விவசாயத்திற்காக இவன் தோண்டிய கிணறுகனை பொறாமையால் மூடிப்போடுவது அல்லது அது தங்களுடையது என்று வாக்குவாதம் செய்து எடுத்துக் கொள்வது. இது போல பல இடங்களில் நடந்தும் ஈசாக்கு அங்கெல்லாம் விட்டுக் கொடுத்தான் என்பதுதான் அவனைப்பற்றிய சிறப்பு! இது நம் ஆண்டவர் சொன்ன, உன்னோடே வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டு விடு என்ற உபதேசத்திற்கு ஒத்திருப்பது ஆச்சரியத்தை அளிக்கிறது (ஆதி 26:12–22) தேவன் அவனிடம் பயப்படாதே நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமுடைய தேவன், உன்னை ஆசீர்வதித்து உன் சந்ததியைப் பெருகப் பண்ணுவேன்

(ஆதி 26:24) என்று ஆசீர்வதித்தார். வாலிபத்தில் தேவனை தியானித்ததும்(ஆதி 24:63) கிறிஸ்துவைப் போல பலியிடுகிற சமயத்தில் வாயைத் திறவாமல் இருந்ததும் இவனுடைய கூடுதல் சிறப்பாகும்.

இறுதியாக, தேவன் ஏன் வெட்கப்படுகிறதில்லை என்பதற்கு யாக்கோபை பற்றி நாம் பார்க்கும் போது இன்றைய வாலிபப் பிள்ளைகளைப் போல தாங்களே பெண்தேடிக் கொள்கிற அந்த விஷயத்தில் யாக்கோபு பெற்றோர் சொல்லுக்கு கீழ்ப்படிந்தார் என்பது கவனிக்கத்தக்க பண்பு. தன் மாமனிடம் மனைவிக்காக 14 வருடம் மந்தையில் 6 வருடம் என உழைத்து சம்பாதித்த வைகளுடன் ஊர் திரும்ப முடிவுசெய்த போது லாபான் பின்தொடர்ந்து யாக்கோபிடம் பிரச்சனை செய்தான். அப்போது யாக்கோபு என் பிதாவின் தேவனாகிய ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் பயபக்திக்குரிய வரும், என்னோடு இராமற்போனால் நீர் என்னை வெறுமையாக அனுப்பிவிட்டிருபீர் என்று அறிக்கையிட்டான் (ஆதி 31:41,42) அதன்படி தேவன் நம் சிறுமையையும், கைப்பிரயாசத்தையும் காண்கிற தேவன் என்பது உண்மையாகிறாது. நம்மோடே அவர் இருந்து நமக்கு எந்தப் பொல்லாப்பும் நேரிடாதபடி நம் எதிராளியிடம் பேசுகிற தேவன் நம் தேவன் என்பது நமக்கு பெரிய ஆறுதலையும், நிம்மதியையும் சந்தோஷத்தையும் அளிக்கிறதல்லவா?

அதனால்தான் தேவன் அவர்களுடைய **தேவன் எனப்பட வெட்கப்படுகிறதில்லை.** அப்படிப்பட்ட விசுவாசமும், நம் பிக்கையும், அறிக்கையிடுதலும் நம்மிடம் காணப்படவேண்டும். பழைய ஏற்பாட்டில் இவ்வளவு சிறப்பான நபர்களுக்கும் தேவனாக இருந்தவரே புதிய ஏற்பாட்டில் நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவினால் இப்போது நமக்குப் பிதாவாக இருக்கிறார். இது எவ்வளவு பெரிய விஷயமென்று பாருங்கள் என்கிறார் மூப்பனாகிய யோவான் (1 யோவா 3:1). ஆண்டவர் இயேசுவும் நம்மை சகோதரர் என்று சொல்ல அவர் வெட்கப்படவில்லை என்று சொல்ல அவர் வெட்கப்படவில்லை என்பது(எபி2:11). நமக்கு இருக்கும் மற்றொமொரு மிகப்பொரிய சிலாக்கியமாகும்.

ஆனால் எச்சரிப்பாக என்னைக்குறித்தும், என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப்படுகிறானோ வருகையில் அவனைக் குறித்து ஆண்டவர் வெட்கப்படுவார் (லூக் 9:26) நம் நல்நடக்கையால் தேவனை மகிமைப்படுத்துவோமாக . ஆமென்

## நாம் தேவனால் பிறந்தவர்கள் (I யோவான் 5:1)

**சகோ. K.M. பிலிப்**

**கி**றிஸ்துவுக்குள் பிரியமான தேவனால் பிறந்தவர்களுக்கு இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துதலை தெரிவித்துக் கொள்கிறேன். இக்கட்டுரையின் தலைப்பு நம்மை தலை நிமிர்ந்து நிற்கச் செய்கிறது. வேதத்தில், நாம் தேவனால் பிறந்தவர்கள்; தேவனுடைய பிள்ளைகள் (ரோமர் 8:16 ; யோவான் 5:1) என்று பரிசுத்த ஆவியானவர் நம்மைக் குறித்து சாட்சி கொடுக்கிறார். இச்செய்தி நமக்கு கிடைத்ததற்குரிய மாபெரும் பாக்கியமாகும். (1யோவான் 4:4). இங்கு சில கேள்விகள் நமக்குள் எழுகிறது. இப்பரந்த உலகில் வாழும் மக்களுக்கிடையே நாம் தேவனுடைய பிள்ளைகள் என்பதற்கான அடையாளங்கள் நம்மிடத்தில் உண்டா? பிறர் நம்மை அடையாளம் காண முடியுமா? தகப்பனின் சாயல் பிள்ளைகளிடம் காணப்பட வேண்டாமா? அப்படியானால் தேவனால் பிறந்தவர்களுக்குரிய அடையாளங்களை பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்துவதை சற்று கவனிப்போம்.

தேவனால் பிறந்தவனெவனும் பாவம் செய்யான்; தன்னைக் காக்கிறான்; பொல்லாங்கன் அவனைத் தொடான் (1யோவான் 3:9;4:7). அன்புள்ள எவனும் அவரில் பிறந்தவன்; நீ செய்கிறவன் எவனும் அவரில் பிறந்தவன் (1யோவான் 2:29). நன்மை செய்கிறவன் தேவனால் உண்டாயிருக்கிறான் (III யோவான் 11), என்று அடையாளப்படுத்தவதை காண முடிகிறது. முதலில் இந்த அடையாளங்களை நம்மில் தேடுவோம். இவைகளில் நன்மை செய்கிறவன் தேவனால் உண்டானவன் என்ற அடையாளத்தை இப்பொழுது நம்மில் உருவாக்கி நம் பரம தகப்பனாகிய பிதாவை மகிமைப்படுத்துவோம். நன்மை செய்து இன்னும் நமக்குள் வாழும் சிலரை வேதத்திலிருந்து அடையாளப்படுத்துவோம். ஏனெனில், நன்மை பிறப்பிக்க செய்த தேவனைக்குறித்து, தேவரீர் நல்லவரும், நன்மை செய்கிற வருமாயிருக்கிறீர் ( சங்கீதம். 119:68) என்று வசனம் அவரது பண்பை எடுத்துக் காட்டுகிறது. அவரது முதற்பேரான குமாரன் இயேசுவைக் குறித்து, தேவன் அவருடே கூட இருந்தபடியால் நன்மை செய்கிறவராய்.... சுற்றித்திரிந்தார் என்று (அப் 10:38) அடையாளப்படுத்துகிறது. மேலும், மனுஷர்களே! நன்மை இன்னதென்பது அவர் உனக்கு அறிவித்திருக்கிறார் (மீக 6:8). நன்மை செய்யப்படியுங்கள் (ஏசா 1:17) என்று அறிவுறுத்தியிருக்கிறார். அதுமட்டுமல்ல, கர்த்தரை நம்பி நன்மை செய் என்று உற்சாகத்தையும், தைரியத்தையும் கொடுத்திருக்கிறார். தீமையை விட்டு விலகி நன்மைசெய் (சங் 37:27) என்று வழியும்

காட்டியிருக்கிறார்கள். மேலும் நன்மையை ஜாக்கிரதையுடன் தேடுகிறவன் தேவ தயை யைப் பெறுவான் [நீதி. 11:27] நீங்கள் பிழைக்கும்படி..... நன்மையைத் தேடுங்கள்..... சேனைகளின் தேவனாகிய கர்த்தர் உங்களோடேகூட இருப்பார் [ஆமோஸ் 5:14]. இப்படி தேவதயவும் பெற்று, தேவனும் நம்மோடு இருந்தால் நமக்கு குறைவிருக்குமோ? எல்லாம் நன்மையே.

இங்கு, நன்மைசெய்து நான் தேவனால் பிறந்தவன் என்று நிலைநாட்டிய சிலரை சுருக்கமாய் பார்ப்போம். [ஆதி :40] ஆபிரகாமின் கொள்ளுப்பேரனும், யாக்கோபின் செல்லப் பிள்ளையுமான யோசேப்பு தன் சொந்த சகோதரராலே எகிப்துக்கு, அடிமையாய் விற்கப்பட்டு போர்த்திபர் வீட்டில் அடிமை வேலை செய்தபோது, பொய்யான குற்றச்சாட்டால் சிறையில் அடைக்கப் பட்டான். இக்கொடிய சூழ்நிலையிலும் அங்கு அவனோடு அடைக்கப்பட்டவர்கள் துக்க முகமாய் இருப்பதைக்கண்டு, இன்று நீங்கள் துக்கமாயிருக்கிறது என்ன? என்று ஒரு கேள்வி கேட்டான். இது வெறும் கேள்வியல்ல. அதில் யோசேப்பின் அன்பும், கரிசனையும், விசாரிப்பும் வெளிப்பட்டது. தொடர்ந்து துக்கத்தை நீக்கி அவர்களுக்கு நன்மை செய்யும்படியாய், அவர்கள் துக்கம் நீங்கும்படியாய் தேவனிடம் மன்றாடி ஜெபித்து அவர்களின் துக்கங்களை மாற்றி நன்மையான பதிலைக் கொடுத்து அம்மூவரின் வாழ்க்கையும் மீண்டும் செழிக்கச் செய்தான். இங்கு நாம் அறிய வேண்டியது பெற்றோரை, சகோதரரை உறவுகளை, நாட்டையே பிரிந்து சிறைக்கைதியாய் இருந்த சூழ்நிலையிலும், தன்னைப்பற்றி சிந்திக்காமல், தன்னைச் சுற்றி இருப்பவர்களின் துக்கத்தை எடுத்துப்போட்டு யோசேப்பு நன்மை செய்துதான். தேவ ஜனம் என்பதை அடையாளப்படுத்தினான். அன்பான தேவ பிள்ளைகளே! நமக்கு முன்பாக, நம்மைச் சுற்றிலும் துக்கத்தோடு, வேதனையோடு, பயத்தோடு, கண்ணீரோடு சோர்ந்து காணப்படுகிற தேவனற்ற மக்களையும் விசுவாசிகளையும் அணுகி, அன்போடு விசாரித்து தேவன் நமக்குக் கொடுத்துள்ள பெலத்தின் நன்மைகளை அவர்களோடு பகிர்ந்து விசாரித்துள்ளோமா? புதிதாய் சபைக்கு வருகிறவர்களிடம் அன்புகாட்டி உற்சாகப்படுத்தி யிருக்கிறோமா? நாட்டின் நன்மைக்காக ஜெபித்திருக்கிறோமா? தேவனால் பிறந்த யோசேப்பு தன் நலம் கருதாமல் பிறர் நலம் கருதி நன்மை செய்ததால், அடிமை அதிபதியாய் உயர்த்தப்பட்டான். அந்த நன்மைகள் அவனுடைய குடும்பத்திற்கும் நாட்டிற்குமே மகிழ்ச்சியை, செழிப்பைக் கொடுத்தது. நன்மைகளை வாரி வழங்கியது. இது தேவனால் பிறந்த நம்மால் கூடும். ஆம் தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும் [1யோவான் 5:4].

(II இராஜா. 8:37,8:1-6) இப்பகுதியில் நன்மைகள் செய்து ஆசீர்வாதங்களைப் பெற்று அனுபவித்த தேவப்பிள்ளை சூனேம் ஊரைச்சார்ந்த ஒரு கனம் பொருந்திய ஸ்திரீயின் வாழ்க்கையைக் கவனிப்போம். இவன் ஊழியக்காரன் எலிசாவை முழுமனதோடு தன் வீட்டில் ஏற்று உபசரித்ததோடு தன் வீட்டின் மாடியில் ஒரு வீட்டைக்கட்டி அதில் எலிசாவுக்குத் தேவையானவைகளை, எல்லா நன்மைகளையும் எலிசா கேட்காமலேயே செய்து கொடுத்தாள். அந்த கைமாறு கருதாத நன்மைகள், அவளுக்கு குழந்தை பாக்யத்தைக் கொடுத்தது. வளர்ந்து வந்த பிள்ளை திடீரென இறந்துவிட்டது. ஆனாலும், எலிசா மூலம் மீண்டும் உயிரோடு பெற்றுக் கொண்டாள். ஏழு வருட பஞ்சகாலத்தில் அவள் குடும்பத்தைக் குறைவின்றி தேவன் காத்துக் கொண்டார். இடையில் இழந்து போன வீட்டையும், வயலையும் அதன் பலன்களையும், இராஜாவின் கண்களில் தயவு கிடைத்து மீண்டும் பெற்றுக் கொண்டாள். இப்படிக் கர்த்தரை நம்பி நன்மை செய்த தேவ பிள்ளையின் வாழ்க்கையை தேவன் பொறுப் பேற்றுக் கொண்டார்.

பிரியமான தேவ ஜனமே, உங்கள் ஊழியரிடம் உண்மையான அன்பு செலுத்தி கனப்படுத்துங்கள். ஊழியத்திற்கு எல்லா வகை யிலும் உதவியாயிருங்கள். விசுவாசக் குடும்பத்தாருக்கும் நன்மை செய்யுங்கள். இப்படி சபைக்கும், சமுதாயத்திற்கும் நன்மை செய்வதில் சோர்ந்து போகாமலிருப்போமாக (கலா 6:10,9). ஏற்ற காலத்தில் அறுப்போம். நன்மை செய்கிறவர்களுக்கு சேனைகளின் கர்த்தர் துணையாயிருக்கிறார்.

நன்மை செய்வதில் பெரியவர்கள் மட்டுமல்ல வாலிப, சிறுவர் சிறுமிகளும் தேவனால் பிறந்தவர்கள் என்று தங்களை அடையாளப் படுத்தமுடியும். II இராஜா.5 ல் ஒரு வரலாற்றைக் காண்போம். சீரிய நாட்டுத் தளபதி நாகமானால் அடிமையாகக் கொண்டுவரப்பட்ட இஸ்ரவேல் நாட்டின் சிறுமி, நாகமானின் சரீரத்தை குஷ்டரோகம் தீண்டியிருப்பதை அறிந்து தனக்கு தீமை செய்த நாகமானுக்கு நன்மை செய்தபடியால் நாகமானின் குஷ்டம் நீங்கி பூரண சுகம் பெற்றான். சரீர சுகமட்டுமல்ல ஆன்மீகத்திலும் சுகம்பெற்று, இஸ்ரவேலிருக்கிற தேவனைத்தவிர பூமியெங்கும் வேறே தேவன் இல்லை என்று அறிக்கையிட்டு மனம் மாறினான். இச்சிறுமி காட்டிய மாயமற்ற அன்பு - பகைவரையும் சிநேகிக்கும் பண்பு அவள் தேவனுடைய பிள்ளை என்பதை அடையாளப்படுத்திற்று. இப்படிச் செய்தால் நாமும் பரலோகத்திலிருக்கிற நம் பிதாவுக்கு புத்திரராயிருப்போம் (மத் 5:44,45). துன்பத்தின் மத்தியில் வாழ்ந்த சிறுமியே இவ்வளவு பெரிய நன்மைகளைச் செய்ய முடியுமென்றால் - நீங்கள் இதை உணர்ந்தால் நிச்சயம் நீங்களும், தீமைக்கு தீமை செய்யாமல் தீமையை வெல்ல முடியும் (ரோமர் 12:21).

அப் 9:36-42 யோப்பா பட்டணத்து சபை விசுவாசி தொற்காள் என்னப்பட்ட தபீத்தாள், தன் வாழ்க்கையில் சபையைச் சார்ந்த அநேகருக்கு தன்னால் இயன்ற தான தர்மங்களைச் நன்மைகளை செய்துவந்தாள். அவள் நோய் வாய்ப்பட்டு இறந்து போனாள் அவளை சபையாரே தாங்கினர். அங்கு வந்த பேதுருவிடம் அவள் செய்த நன்மைகளை எடுத்துக்காட்டி, மரித்த அவளுக்கு நன்மை செய்ய வேண்டிக்கொண்டனர். பேதுரு அவளுக்காக பிதாவிடம் மன்றாடி ஜெபித்து தபீத்தாளை உயிரோடு எழுப்பினார். இப்படி அவள் செய்த நன்மைகள் இழந்துபோன ஜீவனை மீண்டும் பெற்றுத் தந்தது. சபையார் எல்லோருடைய அன்பும் அவளுக்குக் கிடைத்தது. என தருமை சபையாரே! நன்மை செய்ய ஒப்புக் கொடுங்கள். நீங்களும் சபையில் பிரகாசிக்க முடியும்.

நிறைவாக, அன்பானவர்களே! நம் வாழ்நாளில் தேவன் வேதத்தின் மூலம் நமக்குக் கற்றுக் கொடுத்திருக்கிற நன்மையான விதைகளை எங்கும் எப்பொழுதும் விதைப்போம். 30ம், 60ம், 100மான பலன்களை அறுவடை செய்வோம். அப் 10-ல் கொர்நேலியு செய்த தான தர்மங்களாகிய நன்மைகளால் அவன் ஜெபம் பரலோகத்திற்கு எட்டியது, கதவை தட்டியது. கதவு திறக்கப்பட்டு அவனும் அவன் குடும்பத்தாரும் உறவினர்களும் இரட்சிக்கப்பட்டார்கள். எவ்வளவு பெரிய நன்மையான அறுவடை பாருங்கள். உங்கள் ஜெபம் கேட்கப்பட, பதில் கிடைக்க சோர்ந்து போகாமல் நன்மை செய்யுங்கள். ஆனால், நினைவில் வையுங்கள்: நன்மை செய்ய அறிந்திருந்தும் அதைச் செய்யாமலிருப்பது பாவம் [யாக் 4:17]. மேலும், காலத்தை கடத்தாதீர்கள். நன்மை செய்யும்படி உனக்குத் திராணியிருக்கும்போது அதை செய்யத்தக்கவர்களுக்கு செய்யாமல் இராதே [நீதி 3:27]. காலத்தை பிரயோஜனப்படுத்துங்கள். கிறிஸ்துவின் வருகையில் நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருப்பார்கள் [யோவான் 5:29]. பரலோகத்தை சுதந்தரித்துக் கொள்வார்கள். ஏனெனில், நன்மை செய்ய நாம் தேவனால் பிறந்தவர்கள். ஆமென்!!

## இதுவே வழி

1. கொடுத்தால் பெறுவாய் – லூக். 6:38
2. விதைத்தால் அறுப்பாய் – கலா. 6:7
3. அடங்கினால் உயருவாய் – I பேது. 5:6
4. தாழ்த்தினால் கிருபை பெறுவாய் – I பேது. 5:5
5. மன்னித்தால் மன்னிக்கப்படுவாய் – மத். 6:14